பக்கங்கள்-16 | 29.தை.2023 | விலை–50.00





# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –400

## தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகியவர்கள்

### கொள்கை ரீதியில் விலகியதாக கூறுகின்றார்கள் உண்மை அதுவல்ல!



## தமிழ் தேசிய கூட்டமைப்பை சிதைக்கவந்த சகுனி எம்.ஏ.சுமந்திரன்

பா.உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன்(ஜனா)



## ஊடகப்படுகொலைகளை மூடி மறைக்கும் இலங்கை அரசு – நீதி கிடைக்குமா?



## சுதந்திர தினம் தமிழினத்திற்கு கரிநாள்

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகியவர்கள் கொள்கை ரீதியில் விலகியதாக கூறுகின்றார்கள் உண்மை அதுவல்ல!

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்

**கேள்வி : உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெறவிருக்கின்ற காரணத்தில் பொதுவாக மக்களின் நிலைப்பாடு எப்படியிருக்கின்றது. அல்லது தமிழ் மக்களினுடைய தலைவர்கள் எப்படி செயற்படுகின்றார்கள் என்ற விடயத்தைப் பார்க்கின்றோம். அந்த அடிப்படையிலே இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஒரு நிதி நெருக்கடியின் பின் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத் தேர்தலை நடத்துவதன் சாத்தியம் எப்படியிருக்கின்றது.?**

பதில் : உண்மையில் 2018 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியிலே ஐந்து வருடங்களுக்கு பின்னர் இந்த உள்ளூராட்சிசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. உண்மையில் இதுகூட 4 வருடங்களில் நடத்தப்பட வேண்டிய தேர்தல் ஒரு வருடம் காலம் கடந்து இந்த தேர்தல் இடம்பெறுகின்றது என்பது ஒரு விடயம். அதற்கு முன்பு கொரோனா வைரஸ் அச்சுறுத்தல்கள் மற்றும் நோய் தாக்கங்கள் இருந்தது என்பது உண்மை. இப்பொழுது அதையும் தாண்டி ஆட்சியில் இருக்கும் சூழலைப் பார்த்தால் மிகவும் ஒரு இக்கட்டான பொருளாதார நெருக்கடி இக்கட்டான ஒரு வங்குரோத்து நிலைமை ஏற்பட்டுள்ள இந்த நிலையிலே இவ்வாறான ஒரு தேர்தல் தேவைதானா? என்றவொரு கேள்வி இருக்கின்றது. இருந்தாலும் ஒரு ஜனநாயக நாட்டிலே ஜனநாயகத்தை மதிக்கும் ஒரு நாடாக இருந்தால் அந்த அந்த காலப்பகுதியில் அந்த அந்த தேர்தல்களை நடத்த வேண்டிய சூழ்நிலை அரசாங்கத்திற்கு இருந்திருக்க வேண்டும். உங்களுக்கு தெரியும் ஏற்கனவே இலங்கையில் இருக்கின்ற 9 மாகாணசபை தேர்தலும் கலைக்கப்பட்டு காலம் கடந்து காலாவதியாகிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே இந்த தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதை தடுப்பதற்காக ஒரு பத்திரிகையிலே பார்த்தேன் பேராசிரியர் பீரிஸ் அவர்கள் கூறியிருந்தார். 7 தடவைகள் இந்த தேர்தலை ஒத்திவைப்பதற்காக தற்பொழுது இருக்கும் அரசாங்கம் முயற்சிக்கின்றது அதுவும் இயலாமல் இருக்கின்றது என்றவொரு விடயத்தை கூறியிருந்தார். ஆகவே இந்த தேர்தல் நடக்குமா? என்பதில் இன்றுவரை எங்களுக்கு கேள்விக்குறியாக இருக்கின்றது. இருந்தாலும் தேர்தலை சந்திக்கக்கூடிய பொறுப்பு வாய்ந்த கட்சி என்ற ரீதியிலே தமிழரசுக் கட்சி மட்டக்களப்பு மாவட்டத்திலே இருக்கின்ற ஒரு மாநகரசபையும் 10 பிரதேச சபைக்குமான வேட்புமனுக்களை தாக்கல் செய்திருக்கின்றோம். நகரசபையாக இருக்கக்கூடிய காத்தான்குடியிலே நாங்கள் அதை தவிர்த்திருக்கின்றோம்.

**கேள்வி : இந்த அடிப்படையில் உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் இடம்பெறுவதற்கு முன்னதாக சாணக்கியனின் இல்லத்தில் தான் தமிழரசுக் கட்சியின் ஒரு கூட்டம் இடம்பெற்றது. அதிலே கட்சிகள் தனித்தனியே போட்டியிட வேண்டும் தமிழரசுக் கட்சியினுடைய தீர்மானத்திற்கு அவர்கள் கட்டுப்பட வேண்டும். அல்லது தனித்தனியே போட்டியிட்டு மீண்டும் இணைய வேண்டும் என்ற விடயங்கள் தமிழரசுக் கட்சியில் இருக்கின்ற அங்கத்தவர்களினால் முன்வைக்கப்பட்டதாகவும் மத்தியக் குழுவினால் முன்வைக்கப்பட்ட தருணத்திலே அவர்கள் அப்பொழுது கூட்டாக இருந்த ரெலோ மற்றும் புளொட் கட்சியும் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிவிட்டது. வெளியேறி DTNA என்றவொரு கட்சியை உருவாக்கி இருக்கின்றது. உண்மையில் என்ன நடக்கின்றது?**

பதில் : உண்மையிலே இலங்கையின் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டம் மட்டக்களப்பிலே களவாஞ்சிக் குடியிலே இடம்பெற்றது. அதற்கு முந்தைய கூட்டம் கடந்த ஜனவரி மாதம் 11 ஆம் திகதி மட்டில் வவுனியாவில் அந்த கூட்டம் இடம்பெற்றிருந்தது. வவுனியாவில் இடம்பெற்ற மத்திய குழு கூட்டத்திலே இந்த தேர்தல் தொடர்பாக ஆராயப்பட்டது. அப்பொழுது அங்கு கூறப்பட்ட விடயம் என்னவென்றால் இந்த கலப்புமுறை தேர்தலினால் அல்லது விகிதாசார தேர்தல் இந்த இரண்டு தேர்தலுக்கும் சில வித்தியாசம் இருக்கின்றது. மட்டக்களப்பிலே இறுதியாக இடம்பெற்ற மத்தியகுழு கூட்டத்திற்கு முன்னதாக கடந்த ஜனவரி மாதம் வவுனியாவிலே மத்திய குழு கூட்டம் இடம்பெற்றது. வவுனியாவில் இடம்பெற்ற கூட்டத்தில் தேர்தல் ஒன்றிற்கான வாய்ப்பு இருக்கின்றது என்பதனால் அது எவ்வாறு முகம்கொடுக்கலாம் என்பதை ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் 2018 ஆம் ஆண்டு நாங்கள் கடந்த தேர்தலிலே கற்றுக்கொண்ட பாடம் என்னவென்றால் த.தேசிய கூட்டமைப்பின் மூலமாக நாங்கள் பல இடங்களிலே போட்டியிட்டாலும் கூட எந்தவொரு சபையையும் முழுமையாக நாங்கள் ஆட்சி செய்யவில்லை. அதற்கு சின்னதொரு உதாரணம் மட்டக்களப்பு மாநகர சபையில் இருக்கக்கூடிய 20 வட்டாரங்களில் 17 வட்டாரங்களில் மக்கள் எங்களுக்கு ஆதரவு தெரிவித்தார்கள். ஆனால் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட 17 பேரையும் வைத்துக்கொண்டு ஆட்சி செய்யமுடியாமல் ஏனைய கட்சிகளில் தங்கியிருந்து ஆட்சிகள் செய்யவேண்டிய நிலைமைகள் ஏற்பட்ட காரணத்தினால் வேறு கட்சிகளை நாங்கள் ஆதரவு தேடி ஆட்சி செய்திருந்தோம். அதைப்போன்று தான் பிரதேச சபைகளிலும் வடக்கு கிழக்கிலே பல இடங்களில் இதிலிருந்து வந்த நாங்கள் யோசித்திருந்தோம் வேறு கட்சியிலும் நாங்கள் தங்கி இந்த பிரதேச சபை அல்லது மாநகர சபையிலே ஆட்சி செய்வதை விட எங்களிடம் இருக்கின்ற மூன்று கட்சிகளையும் அதாவது இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ் மக்கள் விடுதலைக் கழகம் மூன்று கட்சிகளும் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள்.




எனவே இந்த மூன்று கட்சிகளின் சின்னத்தில் நாங்கள் வேட்பாளர்களை நிறுத்தி அதை பெறுகின்ற பொழுது முழுமையாக த.தேசிய கூட்டமைப்பு ஆட்சி செய்யலாம் தான் என்றவொரு கருத்து அங்கு கூறப்பட்டது. இந்த கருத்து கூறுகின்றபொழுது கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் கூறியிருந்தார். இந்த விடயம் தொடர்பாக தான் பாராளுமன்றத்தில் கட்சித்தலைவராக இருக்கக்கூடிய செல்வம் அடைக்கலநாதன் அவர்களுடனும் சித்தார்த்தன் அவர்களுடனும் நாங்கள் இதுதொடர்பாக கதைத்தபொழுது அவர்களும் இதை நல்லதொரு முடிவாக ஏற்றிருப்பதாகவும் இதை நாங்கள் மீள்கொண்டு பரிசீலனை செய்யலாம் என்று கூறியிருந்ததாகவும் அந்த கருத்தை அவர் கூறியிருந்தார். அந்த அடிப்படையில் தான் அதை முடிவாக எடுக்கவில்லை ஆலோசனையாக எடுத்திருந்தோம். அதன் பின்னர் தான் மட்டக்களப்பிலே இடம்பெற்ற மத்திய குழு கூட்டத்திலே விரைவாக கருத்துக்கள் கூறப்பட்டபொழுது எல்லோரும் அதிலே கூறியிருந்தார்கள் கடந்தகால அனுபவத்தின் நிமித்தமாக இவ்வாறு கேட்பது என்பது ஒருமுறை இன்னுமொரு முறை கூறப்பட்டது ஏற்கனவே நாங்கள் 2018 ஆம் ஆண்டு தேர்தல் அறிவித்தவுடனே த தே கூட்டமைப்பில் இருக்கக்கூடியவர்கள் சம்பந்தன் ஐயா சுமந்திரன் மாவை சேனாதிராஜா அல்லது புளொட்டில் இருக்கக்கூடிய உள்ளூர் தலைவர்கள் அனைவரும் மட்டக்களப்பிலே கூடியொரு ஆலோசனை செய்யப்பட்டது. பொதுவாக வேட்பாளர்களை மூன்று கட்சிகளும் இணைந்து ஒவ்வொரு வட்டாரங்களுக்கும் சென்று பொதுவாக வேட்பாளர்களை இறக்கி த.தே.கூட்டமைப்பு என்ற பெயரை மட்டும் பயன்படுத்தி தேர்தலிலே போட்டியிடப்பட வேண்டும் என்றவொரு ஆலோசனை கூறப்பட்டது. அது நல்லதொரு ஆலோசனையொன்று இவர்கள் கூறி யாழ்ப்பாணத்திற்கு சென்றார்கள். அங்கு சென்றதன் பின்னர் தான் இது மாற்றப்பட்டு சில சில பிரதேச சபைகளை இந்த இந்த கட்சிகளுக்கு பிரித்து அல்லது பங்கீட்டு அடிப்படையிலே கொடுத்திருந்தார்கள். பங்கீட்டு அடிப்படையிலே அந்த பிரதேச சபைகளை கொடுத்ததன் பின்னர் 2018 ஆம் ஆண்டில் இருந்து இந்த தேர்தல் வரையும் பங்காளி கட்சிகளாக இருந்தாலும் பங்காளி கட்சிகளுக்கு இடையிலே சில கருத்து வேறுபாடுகள் சில விடயங்களிலே ஒற்றுமையாக சில முடிவுகளை எடுக்க முடியாத சூழ்நிலை சில சபைகளில் இருக்கின்ற விடயங்களை கொண்டு செல்கின்ற பொழுது சில முரண்பாடுகள் அவ்வாறான கருத்துக்கள் வந்ததன் காரணமாக இந்த முறை நாங்கள் வேறு கட்சிகளிடத்தில் தங்கி இல்லாமல் இவ்வாறு செய்யலாம் என்ற ஆலோசனை கூறப்பட்டு இது நல்ல முடிவு என்ற விடயத்தை மட்டக்களப்பில் களவாஞ்சிக்குடியில் இடம்பெற்ற கூட்டத்தில் கூட ஆலோசனையால் தான் முன்வைக்கப்பட்டதே தவிர முடிவாக அல்ல. 8 ஆம் திகதி நாங்கள் அந்த கூட்டத்தை நடத்தியிருந்தோம். 10 ஆம் திகதி பங்காளி கட்சிகளுடன் கொழும்பிற்கு சென்று அதற்கு பின்னர் எடுக்கப்படும் முடிவு தான் இறுதி முடிவு என்பதனை நாங்கள் ஏற்றுக்கொண்டிருந்தோம். அதன் பின்னர் தான் அந்த கூட்டத்தில் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தேர்தலில் எவ்வாறு முகம் கொடுப்பது என்ற முடிவுகளையும் எடுத்திருந்தோம். எனவே நாங்கள் தெளிவாக இருக்கின்றோம்.

தற்பொழுது நாங்கள் இலங்கை தமிழரசுக் கட்சியில் எடுத்த முடிவு என்பது பங்காளி கட்சிகள் தனித்தனியாக கேட்டு கூட்டாக ஆட்சியமைக்கப்பட வேண்டும் என்பது தான் அதன் கொள்கை. ஆனால் ரெலோ புளொட் இரண்டு கட்சிகளும் தான் பங்காளி கட்சிகளாக இருந்தது. ஆனால் அவர் அந்த கோரிக்கையின் நிமித்தமாக அல்லது அதிலிருந்து அவர்கள் அதை ஓரளவு ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள் என்று தான் நான் கருதுகின்றேன். ஏற்றுக்கொண்டதன் நிமித்தமாக அவர்கள் இன்னும் சில கட்சிகளை சேர்த்துள்ளார்கள் அது தான் உண்மை. சேர்த்து தற்பொழுது அவர்கள் தனித்து போட்டியிடுகின்றார்கள் நாங்களும் தனித்து போட்டியிருகின்றோம் நிச்சயமாக ஆட்சியமைக்கின்ற நேரம் அந்த தேர்தலுக்கு பின்னர் வருகின்ற பொழுது சிலவேளை எங்களை பொறுத்த வரையில் அவர்களும் தமிழ் தேசியத்திற்காக பாடுபடுகின்ற உழைக்கின்ற கட்சி நாங்களும் தமிழ் தேசியம் என்னும் பொழுது இரண்டு கட்சிகளும் இணைந்து தான் ஆட்சி அமைக்கின்ற சூழ்நிலை வருமென நினைக்கின்றேன். அவ்வாறு வருகின்றபொழுது மீண்டும் அது தமிழ் தேசிய கூட்டமைப்பாக செயற்படும் வாய்ப்பு இருக்கின்றது என்பது எனது தனிப்பட்ட கருத்து.

**கேள்வி : இதிலே இன்னுமொறு விடயம் வடக்கு அரசியல் கிழக்கு அரசியல் என்பது மாறுபட்ட தன்மையை கொண்டிருக்கின்றது. காரணம் முஸ்லிம்களின் ஆதிக்கம் கூடுதலாக இருக்கின்றது. இன்று ஹிஸ்புல்லாவும் ரவூப் ஹக்கீம் அவர்களும் ஒன்றாக இணைந்து கூட்டாக கேட்கின்றார்கள். ஏனென்றால் அது அவர்களின் உத்தியாக இருக்கலாம் சில உள்ளூராட்சிமன்றங்களை கைப்பற்றுவதற்கு. இங்கு தற்பொழுது அதிகூடிய நிலையிலே விரும்பியோ விரும்பாமலோ தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் கட்சியினுடைய பங்காற்றல் என்பது கூடுதலாக இருக்கின்றது. அவ்வாறிருக்கும் பொழுது தற்பொழுது DTNA என்ற ஒன்று தமிழரசுக்கட்சியில் இருந்து ஒரு கட்சியை ஆரம்பித்திருக்கின்றது. தமிழ் மக்களை பிரதிபலிக்கின்றார்கள் அதைப்போன்று தமிழரசுக் கட்சி இருக்கின்றது. இப்படியாக இருக்கின்ற பொழுது இந்த உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றுகின்ற விகித அடிப்படை என்பது சிதறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்குமல்லவா?**

பதில் : இல்லை இல்லை நீங்கள் சொல்லும் விடயம் விகிதாசார தேர்தலுக்கு சேர்கின்ற வாய்ப்பிருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ளலாம். கலப்பு முறை தேர்தல் என்பது கட்சிகளை முதன்மைப்படுத்துவது என்பது ஒன்று. இரண்டாவது அங்கே இருக்கின்ற பிரமுகர்களை கிராம ரீதியாக உள்ளூராட்சி சபைகளில் எடுக்கின்ற வேட்பாளர்களை பொறுத்து தான் மக்கள் வாக்களிக்கும் நிலைமை இருக்கின்றது. நீங்கள் கூறியது போன்று எமது இஸ்லாமிய மக்களாக அல்லது வேறு கட்சிகளாக இருக்கலாம் இஸ்லாமிய மக்கள் தமிழ் கிராமத்திலே போட்டியிடுவதற்கான வாய்ப்பு இல்லை. ஏற்கனவே நாங்கள் ஒரு கட்சியாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளுக்கு எதிராக அல்லது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் எங்களுக்கு எதிராக வேட்பாளர்களை நிறுத்துகின்ற பொழுது அந்த விடயங்களை விகிதாசார தேர்தலிலே பார்க்கக்கூடியதாக இருக்கும். ஆனால் இந்த தேர்தலை பொறுத்தவரையிலே அதைத்தான் இலங்கை தமிழரசுக் கட்சி நாங்கள் தெளிவாக கூறியிருந்தோம். எல்லோரும் வேட்பாளர்களாக இருக்கும் பொழுது பொறுத்தமானவர் யார் என்பது மக்கள் வாக்களிக்கட்டும் நாங்கள் இணைந்து அந்த ஆட்சியை அமைக்கலாம் என்ற ஒரு விடயத்தை நாங்கள் கூறியிருந்தோம்.

ஆகவே இந்த உள்ளூராட்சிகபைத் தேர்தலை பொறுத்தவரையில் அந்தந்த கிராமங்களில் இருக்கின்ற மக்கள் பொறுத்தமான கட்சி இது என்பதை அவர்கள் முதலில் யோசிப்பார்கள். 9, 10 கட்சிகள் தற்பொழுது பல இடங்களிலே போட்டியிடுகின்றது. இரண்டாவதாக போடப்பட்ட வேட்பாளர்கள் பொறுத்தமானவர்களா? என்பதை தீர்மானிப்பார்கள். அவர்கள் மக்கள் செல்வாக்கு உள்ளவர்களா? அல்லது சமூகத்திற்காக பணியாற்றக்கூடியவர்களா? உள்ளூராட்சிசபைத் தேர்தல் என்பது தேசிய இனப்பிரச்சனைக்கான தேர்தல் அல்ல. அந்தந்த கிராம அபிவிருத்தி திட்டங்கள், கிராமத்தில் இருக்கின்ற மின்சார மின்குமிழ்களை போடுகின்ற திட்டங்கள், வீதிகளை செப்பனிடுகின்ற திட்டங்கள் தான் உள்ளூராட்சிசபைத் தேர்தலிலே இருக்கின்றது. ஆனால் அதற்கு பொறுத்தமான கட்சி எது அதே நேரத்தில் வருகின்ற கட்சி என்பது வெறுமனே உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தனது ஆட்சியை தக்கவைப்பது மட்டுமல்ல இனப்பிரச்சனைக்காக சர்வதேச ரீதியாக எங்களது பலத்தை காட்டவேண்டிய தேவை இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலிலே ஒரு பக்கபலமாக இருக்கின்றது. அதுவும் இந்த தேர்தலிலே வெளிக்காட்டப்படும் வாய்ப்பு இருக்கின்றது.

இன்றுவரை உடைவு அல்லது பிரிந்து சென்றார்கள் பிரித்துவிட்டோம் விலகிச்சென்றார்கள் என்ற வர்த்தைப்பிரயோகங்களையாரும்கதைக்கலாம் நான் கதைக்கவில்லை. அது தேர்தலுக்கான ஒரு உத்தியாக தேர்தலை சந்திக்கின்ற பொழுது தமிழ் தேசிய கட்சியில் இருப்பவர்கள் தமிழ் தேசிய அரசியலிலே பங்குபற்றுகின்றவர்கள் எல்லா சபைகளிலும் பங்குபற்ற வேண்டும் என்றால் நிச்சயமாக தனியாக ஒரு கட்சியாக கேட்டு அதிலே நாங்கள் ஆட்சியை கைப்பற்ற முடியாது. கடந்த காலங்களை பார்த்தால் ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவை நாங்கள் பெற்றிருந்தோம் வேறு சுயேட்சை குழுக்களின் ஆதரவை பெற்றிருந்தோம் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டீ.பி கட்சியின் ஆதரவை பெற்றுக்கூட ஆட்சியை அமைத்திருந்தார்கள். இங்கு கருணாவின் சுயேட்சைக்குழுவில் இருந்தவர் கூட எங்களுக்கு ஆதரவு தெரிவித்திருந்தார். ஆகவே தனித்து நாங்கள் செல்லவில்லை. தற்பொழுது நடக்கவிருக்கும் தேர்தல் இடம்பெறுமாக இருந்தால் தூய்மையான தமிழ் தேசியத்தில் பற்றுள்ளவர்கள் பல கட்சிகளில் போட்டியிட்டாலும் அவர்களைக்கொண்டு ஆட்சி அமைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு வரும்என்ற நிலை இருக்கின்றது.

**தொடரும்...**

**நேர்காணல் : இரணியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அரச அடிவருடிகளாகச் செயற்படும் தமிழ் வேட்பாளர்கள் இனங்காணப்படவேண்டும்

அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், கட்சிகள் கட்டுப்பணத்தினையும் செலுத்தியுள்ளன. அதே நேரம் உள்ளூராட்சிமன்றங்கள் சட்ட ரீதியாகக் கலைக்கப்பட்ட வர்த்தமானி இன்னமும் (28.01.2023) வெளியிடப்படவில்லை. இந்த நிலையில் கட்சிகள் ஒவ்வொன்றும் முட்டிமோதிக்கொண்டு மாகாண சபைத் தேர்தல் அல்லது பாராளுமன்றத் தேர்தல் போன்று தமது செயற்பாடுகளைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கிறார்கள்.

இதில் சுயேட்சைகள் ஐம்பதிற்கும் மேல் போட்டியிடுகின்றன. குறிப்பாக சுயேட்சைகளின் நோக்கம் கட்சிகளை பலவீனப்படுத்துவதேயாகும். வடக்கு - கிழக்கில் மாத்திரம் 25 சுயேட்சைக் குழுக்கள் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெறுமா? இல்லையா? என்பது மற்றொரு கேள்வி. இந்தத் தேர்தல் கட்சிகளிடையே இருக்கக்கூடிய அடிப்படைத் தெரிவுகள் சரியாக அமையப்பெறுகிறதா? என்கின்ற களப்பரீட்சையாகவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதிலும் குறிப்பாக தமிழினத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க்கட்சிகள் தமக்கிடையே ஏற்படுத்திக்கொண்ட சிறிய சிறியப் பிணக்குகள் இன்று அதி தீவிரமாக நகர்த்தப்பட்டு வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய பலர் DTNA வில் அங்கம் வகிக்கும் நிலையில், தமிழரசுக்கட்சி எம்மோடு இணைய விரும்பினால் இணையலாம் என்கின்றனர். இக்கட்சிகளை பிளவுபடுத்துவதற்கு கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் அவர்களே சூத்திரதாரியாகச் செயற்பட்டதாக இவர்களால் கூறப்படுகின்றது. ஒற்றுமையே பலம் எனக்கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிகள் ஒவ்வொன்றும் இன்று கருத்துமோதல்களால் பிளவடைந்திருக்கின்றன. பிரித்தாளும் தந்திரோபாய நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க அவர்கள் செற்பட்டு வருகின்றார். யுத்தத்தினால் வெற்றிகள் கிடைப்பதில்லை அரசியல் ரீதியிலான காய்நகர்த்தல்களும் சமாந்தரமாக செல்லுமாகவிருந்தால் மட்டுமே வெற்றிகளைப் பெற முடியும். ஆயுதக்கட்சிகளை துரோகிகள் என்றும் மக்கள் மத்தியில் இருந்து பிரித்தாளும் ஒரு நடவடிக்கையில் தான் தமிழரசுக் கட்சி களமிறங்கிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்த செயலாளர் இரா.சம்பந்தன் தொடக்கம் அல்பிரட் துரையப்பா. நீலன் திருச்செல்வம் என துரோகப் பட்டியில் நீள்கிறது. தமிழர் விடுதலைப் கூட்டணியின் 15க்கும் மேற்பட்ட முக்கிய தலைவர்கள் விடுதலைப்புலிகளால் சுடப்பட்டனர். எம்.ஏ.சுமந்திரனும் அண்மையில் கிளைமோர் தாக்குதலுக்கு இலக்காகவிருந்த நிலையில் இரு விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஆகவே இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் துரோகிகள் என்பதை இனங்காட்டுவதை விட்டுவிட்டு தமிழர் பிரதேசங்களை சிங்கள இனவாதிகளிடமிருந்து பாதுகாப்பதற்காக தமிழர்த்தரப்பு ஒன்றிணைந்து செயற்படவேண்டும். உதாரணமாக ஹிஸ்புல்லா அவர்கள் இன்று முஸ்லீம் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்திருக்கின்றார். இதனை நாம் புரிந்துகொண்டால். இந்தத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் அனைத்து இடங்களையும் கைப்பற்றக்கூடிய சூழல் தமிழ்க் கட்சிகளுக்கு உருவாகும். அரச அடிவருடிகளாக செயற்படுவதை தமிழ்த் தரப்பின் பலர் நிறுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறில்லையெனில் துரோகப் பட்டியலில் குறித்த அரசியல்வாதிகளும் வரிசைப்படுத்தப்படுவார்கள் என்பது உண்மை.




# கல்லறை பூக்கள்

## பல்துறை எழுத்தாளர் புயல் பெ.ஶ்ரீகந்தநேஷன்

*கதைச் சுருக்கம்*

*கல்லறைப்பூக்கள் என்னும் இந்த முழு நீள தொடரானது - புதினமானது - இலங்கை, இத்தாலி ஆகிய நாடுகளைக் கதைக் களங்களாகக் கொண்டது. இலங்கையில் சாதாரண மக்களும் மத்தியதர மக்களும் படும் அவலங்களை மிக துல்லியமாக இலகு நடையில் காட்டுவதோடு, சில விடயங்கள் வெளிப்படையாகச் சொல்லாமல் இயற்கையின் குறியீடுகள் மூலம் நகர்திச் செல்லப்பட்டுள்ளன.*

*இலங்கையிலும் உலகத்திலும் தொற்று நோய்களினால், ஏற்படும் உயிர் , உடைமைகள் இழப்பும் தொற்று நோய்களின் பரிணாம வளர்ச்சியும் கிளைக் கதைகள் மூலம் அலசப்பட்டுள்ளன. பெண்கள் பற்றி நிலவும் மூடநம்பிக்கைகளையும் திருமணம் - பதிவுத்திருமணம் - பற்றிய போலியான கருத்துக்களையும் உண்மைச் சம்பவங்கள் மூலம் படம் பிடித்து காட்ட தவறவில்லை இந்த புதினம்.*

*உள்நாட்டு யுத்தத்தினால் ஏற்பட்ட அவல வாழ்வியலையும் சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்களின் வாழ்க்கை முறைகள் அழிக்கப்படுவதையும் காட்டுகின்றது. தமிழ் மக்கள் சந்தித்த பல்வேறு இடப்பெயர்வுகளையும் அகதி முகாம் வாழ்க்யையும் புடம் போடுவதுடன், இறுதி யுத்தத்தில் சாதாரண மக்கள் வேதனைக் கடலை நீந்திக் கடந்த விதமும் நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளது. நாவலில் கல்லறையும் கருவறையும் குறியீடுகளே ஆகும்.*

*நாவலானது தொடக்கம் முதல் இறுதி வரை சாத் என்ற பாத்திரத்தையும் அவனது குடுப்பத்தையும் அடிப்படையாகக் கொண்டு கதை முழுவதும் நகர்வதைக்காணலாம். சாத் என்ற பாத்திரம் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா. திருக்கோணமலை, கடல் முதலிய இடங்களில் அரசியல், பொருளாதாரம, பண்பாடு, கலாசாரம், கலை, கல்வி முதலியன சார்பாக எதிர் கொண்ட சாவல்களைக் காட்டுகின்றது. சாதாரண மாணவனாக இருந்து, சாத் தன்னுடைய கடும் முயற்சியால், வாழ்க்கையில் படிப்படியாக வளர்ந்து மருத்துவ மாணவனாக வந்து, முதல் தரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சித்தியடைந்து, இத்தாலி நாட்டிற்குப் புலமைப் பரிசில் மூலம் சென்று, வைத்திய நிபுணராக உயர்ந்து வாழ்க்கையில் வெற்றி பெறுவதைக்காட்டியுள்ளது. உள் நாட்டு யுத்தம் ஆரம்பம் முதல் முடிவு வரையும் கொரோனா முதல் ஒமிக்ரோன் வரையும் மக்கள் ஈழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் நிம்மதியற்று அலைந்து திரிவதை இந்த நாவல் காட்டும். வெளிநாட்டுத் திருமணம் நிச்சயிக்கப்பட்ட தமிழ்ப்பெண்கள் துன்பப்படுவதையும் இயற்கையான பாலியல் தேவைகளைத் தடுப்பதால், ஏற்படும் உள நெருக்கீடுகளையும் கோடிட்டுக் காட்டியுள்ளது.*

*இந்த புதினத்தில் வரும் சாத்தும் அவனது தங்கையும் மறுமணத்தை, நியாய பூர்வமான காரணங்களுடன் நவீன உலகத்தில் அமைதியாக நிறைவேற்றிக் கொள்வதையும் காணலாம. சாத்தின் மகன் தந்தையின் மறுமணத்தில் ஆரம்பத்தில் விருப்பம் இல்லாத போதும் பின்னர் அதை ஏற்றுக்கொண்டு, தனிக்குடும்பங்கள் கூட்டுக் குடும்பமாக மாறுவதையும் ஏற்றுக்கொள்வதுடன், தனக்கொன்று ஒரு மறுமணத்தைத் தேடிப் புறப்டுவதையும் தரிசிக்கலாம். இவை போன்ற பல்வேறு மூடநம்பிக்கைகளை இந்த தொடரில் வரும் பாத்திரங்கள் துணிந்து உடைத்து எறிவது கதை முழுவதும் இழையோடியுள்ளது.*

*ஒரு சமூகத்தின் உண்மையான வரலாற்றையும் வாழ்வியலையும் ஆவணமாக அடுத்த சந்ததிக்கு இந்த 'சமூக வரலாற்று தொடர் கதை' கடத்தும் என்பது எனக்குச் சிறிதும் ஐயமில்லை.*

..........................................................

*உலகமே உருக்குலைந்து பதற்றத்துடன் நின்றது. வல்லரசு நாடுகளின் தலைவர்கள் தான்தோன்றிகள் போல ஊடகங்களில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாதிரி பேட்டிக் கொடுத்தனர். அல்லும் பகலும் வைத்தியர்களும் சுகாதார ஊழியர்களும் முக கவசமும் உடற் கவசமும் அணிந்து, தங்களின் உயிர்களுக்கு உத்தரவாதமில்லாமல் நோயாளிகளின் உயிர்களைப் பாதுகாக்கப் போராடினர். வைத்தியர் சிலரும் தாதியர் சிலரும் சுயநலம் பாராது பொது நலத்துடன் செயற்பட்டதால், தங்களின் பெருமதியற்ற உயிரைத் தியாகம் செய்துள்ளனர். ஊரடங்குச் சட்டத்தினால், அனைவரதும் நாளாந்த வாழ்வியல் பாதித்துள்ளது. கழிவுப் பொருட்களினாலும் இரசாயன வாயுக்களாலும் சுவாசிக்க தடுமாறிய இயற்கை சூழலும் பூமித்தாயும் நிம்மதியாக சுவாசித்தன. 'சுத்தம் சுகம் தரும்' என்னும் பழமொழி இன்னும் சற்று ஆழமாக உடைந்து, 'அடிக்கடிக் கைகளைக் கழுவு உலகத்தில் வாழலாம்' என மனிதனின் ஒவ்வொரு உறுப்பாக சுத்தம் பற்றிய வரைவிலக்கணம் வகுக்கப்பட்டது. உதட்டில் தேன்ளு உள்ளத்தில் நஞ்சு கொண்ட மனிதாகள் சிலர் தாம் இந்த உலகத்திற்கு செய்த வஞ்சகத்தை எண்ணி வாடினார்கள். வல்லரசு நாடுகளிலும் ஏனைய நாடுகளிலும் உணவுக்குப் படிப்படியாகத் தட்டுப்பாடுகள் ஏற்படுவதால், பஞ்சத்தினால் இறக்கும் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்தன. இவற்றையெல்லாம் விட கொடுமையாக கால பருவநிலை மாற்றம் மனிதனை ஆட்கொண்டது் கொள்ளப்போகிறது.*

*உலக நாடுகளில் ஓரிரு நாடுகளையும் ஓரிரு வைத்தியசாலைகளையும் தவிர மற்றைய இடங்களெல்லாம் பீதியில் அமைதி காத்தன. 'மலடி வயிற்று மகன்' போல சில வல்லரசு நாடுகள் பல மாதங்களாக தாம் வைரஸை அழிக்கும் தடுக்கும் மருந்தை கண்டுப்பிடிப்பதாகவும் கண்டுப்பிடித்து விட்டதாகவும் சூளுரைத்தன. வல்லரசுகளின் இந்த அறிவிப்புக்கள் ஏட்டுச் சுரக்காய்களாகவே இருந்தன. பாதிக்கப்படும்மக்களும்இறந்தமக்களும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் அதிகரித்தனர். நவீன அறிவியலை சந்தேகம் கொள்ள வைத்தது. மனிதர்கள் மூக்கையும் வாயையும் 'மஸ்க்' கினால் மூடி கட்டியதினால் ஒருவரை ஒருவர் அடையாளம் காண முடியாமல் கண்களைச் சிமிட்டி தமக்குள் தாமே சிரித்தனர் புன்னகையைத் துணிக்குள் கட்டி வைத்தனர். அமைதியான சூழலில் மரண ஓலங்களும் ஓரிரு தற்கொலைகளும் நடந்துன. அரசியல் வாதிகள் சிலரின் நாக்குகள் புரண்டும் தவறியும் நின்றன. சிலர் பொடிவைத்தும் வாலைக்கீழே போட்டும் ஊடகங்களில் கதைத்தனர். உலகத்தில் விரல் விட்டு எண்ணக் கூடிய தேசாபிமானிகளைத் தவிர்த்து ஏனையோர் பால் நினைந் தூட்டும் தாய் போல மக்கள் மீது அக்கறை காட்டுவதாகத் தம்மைக் காட்டிகொண்டதால், மக்கள் இப்போது பாம்புக்குப் பால் வார்த்தது போல தடுமாறினர்.*

*சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் சப்தமில்லாத வைரஸ் உலகத்தில் நிழல் யுத்தமாக, கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல ஆற்றில் கரைத்த புளியாக நடைபெற்றது. குடும்பங்களில் கணவன்மார் சிலரதும் மனைவிமார் சிலரதும் பிற்போக்கான சிந்தனைகளும் பாலியல் லீலைகளும் பூதாகரமாக வெடித்து, வைத்தியசாலைகளுக்கு ஒப்பாக, காவல் நிலையங்களில் முரண்பாடுகளைத் தீர்க்க மக்கள் கூட்டம் அலை மோதியது. தனியார் துறையெல்லாம் மிரமித்து போய் நின்றன. சில தனியார் துறைகள் சாமானிய மக்களை சாமார்த்தியமாக சுரண்ட சமூக வலைத்தளங்களை பயன் படுத்தின. ஆயுத உற்பத்தியில் பலம் பெற்ற நாடுகள் சுகாதாரத்துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்தன. உலக நாடுகளில் உயிர்களின் முக்கியத்துவமும் பொதுவுடைமைக் கருத்துக்களும் வலுப்பெற்றன.*

*வைரஸூடன் போராடி மரணக்குளத்தின் அக்கரையில் தத்தளிப்பவர்கள் சிலருக்கு ஞானம் பிறந்தது. அந்த ஞானத்தினால் உலகத்திற்கும் தமக்கும் எந்த பயனும் இல்லை என்பதைப் புரிந்து கொண்ட போதிலும், தாம் விளக்கில் மொய்த்த விட்டில் போல இது வரை வாழ்ந்து விட்டதாகவும் சொத்தும் சுகத்திற்காகவும் பட்டமும் பதவிக்காகவும் பொய் புரளியுடன் வாழ்ந்து விட்டதாகவும் உலகை நோக்கி அலற எத்தனித்தார்கள். அப்போது அவர்களின் உயிர்கள், ஆத்திகன், நாத்திகன், கீழோர் மேலோர் பாராமல் விடைபெற்றன. சில உயிர்கள் உலகத்துடனும் உடலுடனும் முட்டி மோதி பரிதாபமாக விடைகொடுக்காமல் விடைபெற்றன.*

தொடரும்...

# சின்னத்தில் என்ன இருக்கிறது?




தமிழரசுக் கட்சிக்கு எதிராக ஒரு புதிய கூட்டமைப்பை அமைக்கும் முயற்சிகள் வெற்றி பெறவில்லை. இதனால் விக்னேஸ்வரன்-மணிவண்ணன் அணியானது மான் சின்னத்தின் கீழும் ஏனைய கட்சிகள் குத்துவிளக்கு சின்னத்தின் கீழும் போட்டியிடுவதாக முடிவாகியுள்ளது.

**தமிழரசுக் கட்சிக்கு எதிராக ஒரு பெரிய கூட்டை உருவாக்கப் போகின்றன என்று எதிர்பார்க்கப்பட்ட கட்சிகள் ஒரு பொதுச் சின்னத்தை கண்டுபிடிக்க முடியாமல் தங்களுக்கு இடையே இரண்டாக உடைந்து விட்டன.** இந்த உடைவை தொகுத்துப் பார்த்தால் வெளிப்படையாக ஒரு விடயம் தெரிகிறது. ஆயுதப்போராட்ட மரபில் வந்த கட்சிகள் ஓரணியிலும் ஆயுதப்போராட்ட மரபில் வராத கட்சிகள் இன்னொரு அணியாகவும் நிற்பதைக் காணலாம்.

இது ஆயுதப் போராட்ட மரபில் வந்த கட்சிகளுக்கும் ஆயுதப் போராட்ட மரபில் வராத கட்சிகளுக்கும் இடையிலான ஒரு முரண்பாடாக தோன்றும். கடந்த வாரம் நடந்த சந்திப்புகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து வந்த ஜனநாயகப் போராளிகள் கட்சியை கூட்டுக்குள் இணைத்துக் கொள்வதற்கு விக்னேஸ்வரன் முதலில் தயக்கம் காட்டினார். ஏனைய கட்சிகள் விளக்கம் கேட்ட பொழுது ஜனநாயக போராளிகள் கட்சியை உள்ளே வைத்துக்கொண்டு அந்த விளக்கத்தை தன்னால் கூற முடியாது என்றும் அவர்களை வெளியே அனுப்பினால் தான் அந்த காரணத்தை வெளிப்படையாக சொல்லலாம் என்று கூறியிருக்கிறார். அதனால் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த சந்திப்பை தொகுத்துப் பார்க்கும் ஒருவருக்கு பின்வரும் கேள்வி எழும். தமிழரசு கட்சிக்கு எதிரான ஒரு பலமான கூட்டை உருவாக்க முடியாமல் போனமைக்கு காரணம்.ஆயுதப் போராட்ட மரபில் வந்த கட்சிகளும் அந்த மரபில் வராத கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாடா ? என்பதே அக்கேள்வியாகும். காலைக்கதிர் பத்திரிகையின் செய்தியாளர் வர்ணிப்பதுபோல "மிலிட்டரி ஹோட்டலும் சைவ ஹோட்டலும்" வேறு வேறாக நிற்கின்றனவா?

ஆனால், கடந்த பொதுத் தேர்தலில் விக்னேஸ்வரன் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் பதிவின் கீழ்தான் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அது மட்டுமல்ல அதற்கு முன்பு கடந்த வடமாகாண சபையில் அவர் தமிழரசுக் கட்சிக்காரர்களால் சுற்றி வளைக்கப்பட்டிருந்த போது அவரைக் காப்பாற்றியது ஆயுதப் போராட்ட மரபில் வந்த இயக்கங்கள் தான். விக்னேஸ்வரனின் எழுச்சியென்பது ஆயுதப் போராட்ட மரபில் வந்த கட்சிகளின் உதவியால் கிடைத்த ஒன்று தான்.அதாவது விக்னேஸ்வரனுக்கு "அசைவ ஹோட்டலில் தான்" விருந்து கிடைத்தது."சைவ ஹோட்டலில்" அல்ல. எனவே தமிழரசுக் கட்சிக்கு எதிரான ஒரு புதிய கூட்டை உருவாக்க முடியாமல் போனமைக்கு காரணம் ஆயுதப் போராட்ட மரபில் வந்த கட்சிகளை மிதவாத மரபில் வந்தவர்கள் ஏற்றுக்கொள்ளத் தவறியமை என்று கூறப்படும் விளக்கம் முழுமையானது அல்ல.

உண்மையான பிரச்சினை சின்னம் தான். கூட்டின் பெயர் தான்.தமிழரசு கட்சிக்கு எதிராக ஒரு பலமான கூட்டை கட்டி எழுப்புவது என்றால் கூட்டமைப்பு என்ற பெயர் தேவை என்று விக்னேஸ்வரன் அல்லாத ஏனைய கட்சித் தலைவர்கள் நம்பினர். கூட்டமைப்பு என்ற பெயரில் வாக்குக் கேட்டால் அதற்கென்று ஒரு வாக்கு வங்கி இருப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். அதனால் ஏற்கனவே 2008 ஆம் ஆண்டு. அதாவது ஆயுதப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எதிராக உருவாக்கப்பட்ட ஒரு கட்சியின் சின்னத்தை பயன்படுத்துவது என்று முடிவெடுத்தார்கள். கட்சியின் பெயர் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பதாகும். அது புளொட் இயக்கமும் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தின் சுகு அணியும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்சியாகும். ஈ.பி.ஆர்.எல்.எப்பின் சுகு அணியானது, தமிழ்த் தேசிய சிந்தனைக்கு வெளியே நிற்கிறது. அந்த இயக்கத்தின் சுரேஷ் அணி தமிழ்த் தேசிய சிந்தனைக்குள் நிற்கிறது.இவ்வாறு புளொட்டும் ஈ.பி.ஆர்.எல்.எஃபின் சுகு அணியும் சேர்ந்து உருவாக்கிய கட்சியின் சின்னத்தை பயன்படுத்தி புதிய கூட்டமைப்பை பதிந்த பின் அதில் இருக்கும் "ஜனநாயக" என்ற வார்த்தையை பின்னர் நீக்கலாம் என்று மேற்படி கட்சிகள் திட்டமிட்டிருந்தன. இது தமிழரசுக் கட்சியைத் தவிர்த்து விட்டு கூட்டமைப்பைப் பதிவது என்று பங்காளிக் கட்சிகள் திட்டமிடத் தொடங்கிய பொழுதே கருக்கொண்ட ஒரு யோசனையாம்.

ஆனால்விக்னேஸ்வரனும்மணிவண்ணனும் அந்த சின்னத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்கள். அக்கட்சியின் செயலாளராக இருப்பவர் புளொட் இயக்கத்தைச் சேர்ந்த ஆர்.ஆர் என்று அழைக்கப்படும் ராகவன். விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் கூட்டமைப்புக்கு எதிராக உருவாக்கப்பட்ட ஒரு கூட்டு அது என்ற அடிப்படையில் அந்த கட்சியின் சின்னத்தை பயன்படுத்துவதற்கு விக்கி-மணி அணி தயங்குகிறது. புதிய கூட்டின் மீது தனது பிடி பலமாக இருக்க வேண்டுமென்றால் அதற்கு தனது கட்சியின் சின்னத்தையே பொதுச் சின்னமாக பயன்படுத்த வேண்டும் என்றும், தன்னை கூட்டின் செயலாளராக நியமிக்க வேண்டும் என்றும் விக்னேஸ்வரன் விரும்பியதாக தெரிகிறது. இவ்வாறாக சின்னம் மற்றும் செயலாளர் விடயத்தில் ஒரு பொதுக் கருத்தை எட்ட முடியாத காரணத்தால் கூட்டு உருவாகவில்லை.

தமிழரசுக் கட்சிக்கு எதிராக ஒரு பலமான கூட்டைக் கட்டியெழுப்பும் பொழுது அதில் கூட்டமைப்பு என்ற பெயர் தேவை என்று விக்னேஸ்வரன் அல்லாத ஏனைய கட்சித் தலைவர்கள் நம்புவதாக தெரிகிறது. கூட்டமைப்பு என்ற பெயர் கடந்த இரண்டு தசாப்தங்களாக மக்கள் மத்தியில் பதிந்திருப்பதனால், அந்த பெயருக்கு என்று ஒரு வாக்குவங்கி இருக்கும் என்றும் அவர்கள் நம்புகின்றார்கள். அது போலத்தான் தமிழரசுக் கட்சியும் தனது வீட்டுச் சின்னத்துக்கென்று ஒரு பெரிய வாக்குவங்கி உண்டு என்று நம்புகிறது.

பழக்கப்பட்ட ஒரு சின்னம் அல்லது பழக்கப்பட்ட ஒரு பெயர் என்பது விமர்சன பூர்வமாக சிந்திக்காத வாக்காளர்களை கவர்வதற்கு இலகுவான வழி என்று நம்பப்படுவதுண்டு. அது ஒரு விதத்தில் பொதுப்புத்தியை அதிகம் உழைப்பின்றி கவர்வதற்கான ஒரு உத்திதான். ஆனால் தமிழ் தேசியப் பரப்பில் கடந்த சில தசாப்தகால அனுபவங்களை தொகுத்துப் பார்த்தால் அது முழு வெற்றி பெற்ற ஒரு உத்தி அல்லவென்பது தெரியவரும்.

அதற்கு கீழ்வரும் உதாரணங்களைக் காட்டலாம்.1989இல்,இந்திய அமைதிகாக்கும் படைக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்ற ஒரு காலப்பகுதியில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில், வெளிச்சவீட்டு சின்னத்தின் கீழ் போட்டியிட்ட ஈரோஸ் இயக்கம் 13 ஆசனங்களை கைப்பற்றியது.தமிழ் அரசியலில் ஒரு சுயேச்சை குழு அந்தளவு ஆசனங்களை அதற்கு முன்னும் கைப்பற்றவில்லை இன்று வரையிலும் கைப்பற்றவில்லை. அங்கே சின்னம் ஒரு விவகாரமாக இருக்கவில்லை. அந்த சின்னம் அதற்கு பின் எந்த ஒரு தேர்தலிலும் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய வாக்குகளைப் பெறவில்லை. அதேபோன்று கடந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலின் போதும் தமிழரசு கட்சிக்கு எதிராகக் கூட்டுச்சேர முற்பட்ட கட்சிகளின் மத்தியில் சின்னம் ஒரு விவகாரமாக காணப்பட்டது.தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னம் வெற்றிகரமானது என்று கருதப்பட்டது. தமிழ்மக்கள் பேரவைக்குள் காணப்பட்ட கட்சிகளை இணைக்க முடியாமல் போனமைக்கு அந்த சின்னமும் ஒரு காரணம்.தேர்தலில் அந்தச்சின்னம் கிழக்கில் ஒப்பீட்டளவில் குறிப்பிடத்தக்க வாக்குகளைப் பெற்றது.எனினும் அது ஒரு நிர்ணயகரமான வெற்றியல்ல.உதயசூரியன் சின்னம் ஒரு காலம் வெற்றியின் சின்னமாகக் கருதப்பட்டது. ஆனால் ஆயுதப்போராட்டத்தின் பின்னணியில் வீட்டு சின்னம் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்ட பொழுது உதயசூரியன் தோற்கடிக்கப்பட்டது.

ஏன் அதிகம் போவான்? கடந்த பொதுத் தேர்தலின் போது வீட்டுச் சின்னத்துக்கு வெளியே வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் மூன்று வெவ்வேறு தரப்பினருக்கு வழங்கினார்கள். முதலாவது தரப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. இரண்டாவது,விக்னேஸ்வரனின் கட்சி. மூன்றாவது, வியாழேந்திரன். எனவே சின்னந்தான் வெற்றிக்கு அடிப்படை காரணம் என்றுநம்புவது சரியா? அதேபோல பழக்கப்பட்ட ஒரு பெயரை வைத்து விமர்சனபூர்வமாக சிந்திக்காத வாக்காளர்களின் கூட்டு உளவியலை கையாளலாம் என்று நம்புவதும் சரியா?



சின்னங்கள் குறியீடுகள் தான். பெயர்களும் குறியீடுகள் தான். **"வார்த்தைகள் அர்த்தங்களால் சுமையேற்றப்படுகின்றன"** என்று ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி கூறுவார். வார்த்தைகளுக்கும் சின்னங்களுக்கும் மந்திரசக்தியை கொடுப்பது கட்சிகளின் வேலை.செயற்பாட்டாளர்களின் வேலை.ஒரு கட்சி எந்தளவு கடுமையாக உழைக்கிறது என்பதில் தான் அது தங்கியிருக்கிறது. எனவே தமிழரசுக் கட்சிக்கு சவாலாக எழுவது என்பது, சின்னங்களிலும் பெயர்களிலும் தங்கியில்லை. விசுவாசமான உழைப்பில் தான் தங்கியிருக்கிறது.

சிறந்த தலைவர்கள் சின்னங்களை உருவாக்குகிறார்கள். வார்த்தைகளுக்கு புதிய அர்த்தங்களைக் கொடுக்கிறார்கள். சின்னங்களுக்கும் வார்த்தைகளுக்கும் மந்திர வலிமை ஏற்றுகிறார்கள். இது தொடர்பில் இரண்டு விடயங்களை அழுத்திச் சொல்ல வேண்டும். முதலாவது, தமிழரசுக்கட்சிக்கு எதிராக என்று சிந்திப்பதே தவறு.அது அதன் உளவியல் அர்த்தத்தில் தமிழரசுக்கட்சியின் பலத்தைக் குறித்த தாழ்வுச்சிக்கலையுங் குறிக்கும். மாறாக தேசத் திரட்சியை கட்டியெழுப்புவதற்காக என்று சிந்திப்பதே சரி. அது தான் ஆக்கபூர்வமானது. இது முதலாவது.இரண்டாவது விடயம், கட்சிகளின் வெற்றி என்பது சின்னங்களிலும் பெயர்களிலும் தங்கியிருப்பதில்லை.நவீன தகவல்தொடர்பு யுகத்தில் கட்சிகளின் வெற்றிக்குரிய விளம்பர உத்திகளையும் பிரச்சார உத்திகளையும் வகுத்துக் கொடுப்பதற்கென்றே தொழிற்சார் வல்லுநர்கள் வந்து விட்டார்கள். அவர்கள் நினைத்தால் சின்னங்களையும் பெயர்களையும் திட்டமிட்டுஸ்தாபிப்பார்கள். ஒரு புதிய ட்ரெண்டை உருவாக்குவார்கள்.எனவே இந்தச்சின்னம் தான் வேண்டும்,இந்தப் பெயர் தான் வேண்டும் என்ற மாயைகளில் இருந்து புதிய கூட்டுக்கள் விடுபட வேண்டும். தமிழ் மக்களையும் அந்த மாயைகளில் இருந்து விடுவிக்க வேண்டும்.

மாயைகளில் மூழ்கிக் கிடந்தால் மெய்மையை கண்டுபிடிக்க முடியாது. மெய்மையை கண்டுபிடித்தால் தான் பொருத்தமான உழைப்பைக் கொட்டி வார்த்தைகளையும் சின்னங்களையும் மந்திரசக்தி மிக்கவையாக மாற்றலாம். எல்லாவற்றிற்கும் கடும் உழைப்பு வேண்டும். வியட்நாமிய புரட்சியின் தந்தை கோஷிமின் கூறியது, புதிய கட்சிக் கூட்டுக்களுக்கும் பொருந்தும். "மக்களிடம் செல்லுங்கள், -மக்களுக்கு உண்மையைச் சொல்லுங்கள், மக்கள் உங்களுக்கு வெற்றிகளைப் பெற்றுத் தருவார்கள்"

**நிலாந்தன்**

# தமிழ் தேசிய கூட்டமைப்பை சிதைக்கவந்த சகுனி எம்.ஏ.சுமந்திரன்

## பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் ஜனா எம்.பியுடனான (ரெலோ) சிறப்பு நேர்காணல்

**கேள்வி : சமகால அரசியல் பார்வையிலே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறவிருக்கின்ற சூழலில் நாட்டினுடைய பொருளாதாரம் மிகவும் ஒரு பின்தங்கிய நிலையிலே உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெறுவது குறித்து உங்களது கருத்து என்ன?**

பதில் : உண்மையிலே நாட்டின் பொருளாதாரம் கடந்த இரண்டு வருடங்களாக மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு ஒரு அதாள பாதாளத்திற்குள் இந்த நாட்டின் பொருளாதாரம் இருந்து கொண்டிருக்கின்றது. இந்த நாடு வெளிநாடுகளிடத்திலே டொலர்களுக்காக கையேந்தி நிற்கின்றது. இந்த வேளையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்று கூடுதலான எதிர்க்கட்சிகள் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஒரு தேர்தல் நடத்துவதற்கு இந்த நாட்டில் 1200 கோடி ரூபாய் தேவையென கூறப்பட்டுக்கொண்டிருக்கின்றது. எங்களைப் பொறுத்தவரையிலே நான் நினைக்கின்றேன் தெற்கிற்கு இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தேவைப்படுகின்றது தங்களது அரசியல் பலங்களை நிரூபிப்பதற்கு. ஏனென்றால் இந்த நாட்டில் ஒரு அரசியல் குழப்பம் கடந்த ஆண்டு ஏற்பட்டது. 69 இலட்சம் சிங்களவர்களினுடைய வாக்குகளினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி இன்று பதவியில் இல்லை. அதே கட்சியை சேர்ந்த 2/3 பெரும்பான்மையை கொண்ட பிரதமர் மகிந்த ராஜபக்ச இன்று பதவியில் இல்லை. ஒரு ஆசனத்தைக்கூட பெறாமல் தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு வந்த ரணில் விக்ரமசிங்க இன்று நாட்டின் அதிபதியாக இருக்கின்றார். இந்த அரசியல் சூழலைப் பயன்படுத்தி அரசியல் மாற்றம் வேண்டும் தாங்கள் அதிகாரத்திற்கு வரவேண்டும் என எதிர்கட்சியில் குறிப்பாக சஜித் பிரேமதாஸ அவர்களை தலைமையாக கொண்ட கட்சியின் கூட்டு அத்துடன் மொட்டுக் கட்சியில் இருந்து வெளியேறியவர்கள் தங்களது அரசியல் பலத்தை சற்று பரிசீலித்துப்பார்க்க வேண்டும். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடந்தால் ஒவ்வொரு வட்டாரத்திலும் கிராமங்களிலும் தங்களது பிரதிநிதிகள் இருந்தால் அடுத்த தேர்தலுக்கு அவர்கள் தயாராவார்கள் என்ற ஒரே நோக்கத்துடன் தான் அவர்கள் செயற்படுகின்றார்கள். அவர்கள் இந்த நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றி கவலைப்படவில்லை என்பது எனது கணிப்பாக இருந்தாலும் எங்களைப் பொறுத்தவரையிலே தேர்தல் ஒன்று வந்தால் நாங்கள் அதை எதிர்கொள்ளத்தான் வேண்டும் வடகிழக்கு தமிழ் மக்கள். எப்பொழுதுமே மக்களின் ஆட்சி தேவை என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். எங்களைப் பொறுத்தவரையில் உள்ளூராட்சிமன்ற தேர்தலைவிட எங்களுக்கு தற்பொழுது தேவைப்படுவது மாகாணசபைத் தேர்தல்.

**கேள்வி : அப்படியிருக்கும் பொழுது ஆயிரத்து நூறு கோடி அளவில் செலவாக இருக்கின்றது. அதை விடவும் 24 ஆயிரம் வேட்பாளர்கள் தற்பொழுது பணத்தை கொடுத்திருக்கின்றார்கள். அதிலே 8840 வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படுமிடத்தே இத்தனை பேர் களமிறங்கப்பட்டிருக்கும் சூழலிலே மக்களினது வாழ்வாதாரப் பிரச்சனை ஒருபக்கத்திலே இருக்கின்றது. அதை தமிழ் தேசிய கூட்டமைப்பில் நீங்கள் இருந்தவர் என்ற வகையிலே இதை வலியுறுத்தி கூறவில்லையா?**

பதில் : த.தே.கூட்டமைப்பு எந்தளவிற்கு வலியுறுத்தி கூறினாலும் அது எடுபடக்கூடிய நிலையில் இல்லை. இருந்தாலும் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள்ளேயே இருந்து தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூட சஜித் அணியுடன் ஒன்றிணைந்து இந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலை நடத்த வேண்டும் என்று இருக்கின்றார். மாகாணசபைத் தேர்தல் பற்றி அவர் அந்த இடத்திலே கதைத்திருக்கவில்லை. நான்கூட பாராளுமன்றத்திலே அவரிடம் நேரடியாக கேட்டிருந்தேன். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சம்மந்தமான எதிர்க்கட்சி கூட்டு கூட்டத்திற்கு இவர் சென்றிருந்தார். தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் எந்தவித கலந்துரையாடலும் செய்யாமல் தன்னிச்சையாக அவர் அந்த எதிர்க்கட்சிகளின் கூட்டு கூட்டத்திலே கலந்துகொண்டிருந்தார். கலந்துகொண்ட செய்தியை அறிந்தவுடன் பாராளுமன்றத்திற்குள்ளே வைத்து ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அவர்களும் இருக்கும் பொழுது நான் அவரிடம் கேட்டேன். உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்று எதிரணி கூட்டுக்கட்சிகளுடன் நீங்கள் இணைந்து பேசும்பொழுது அந்த எதிரணி கூட்டு கட்சிகளுடன் நீங்கள் பேசியிருக்க வேண்டும் மாகாணசபைத் தேர்தலை நடத்துவது சம்மந்தமாக. ஏனென்றால் வடகிழக்கில் இன்று கிழக்கு மாகாணத்திலே மாகாணசபை கலைக்கப்பட்டு ஐந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது. வட மாகாணத்திலே 4 வருடங்களுக்கு மேலாகிவிட்டது மாகாணசபை என்பது முழு அதிகாரங்களும் இல்லாவிட்டாலும் ஓரளவிற்கு அதிகாரங்கள் இருக்கும் பொழுது சபை எங்களது கையிலிருக்கும் பொழுது ஓரளவிற்காவது நாங்கள் இருப்பதை தக்கவைத்துக்கொள்ளும் நிலைமை இருக்கும். அந்த அடிப்படையிலே அவர்களிடம் கேட்டிருந்தேன். அதற்கான சரியான பதிலை அவர் கூறவில்லை.

**கேள்வி : தமிழ் தேசிய கூட்டமைப்பின் இணைவிற்காக ஏன் சுமந்திரன் முடிவெடுக்கின்றார். தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கேட்டபொழுது அவர் ரெலோவினுடைய கட்சியைப் பற்றி விமர்சிக்கின்றார் தன்னிச்சையாக நீங்கள் செயற்படுவதாக குறிப்பிடுகின்றார். வெளிநாடுகளுக்கு சென்று அல்லது தூதரங்களுக்கு சென்று ஒரு கூட்டமைப்பினுடைய கட்டமைப்பை மீறி ரெலோ செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டை சுமந்திரன் அவர்கள் முன்வைத்திருந்தார் ஏன் அந்த புலமைப்பாடு?**

பதில் : கூட்டமைப்பின் கட்டமைப்பை மீறி நாங்கள் எந்தவிதத்திலும் செயற்படவில்லை. கூட்டமைப்பு கட்டமைப்பை பலப்படுத்த வேண்டும் என்று தான் தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கடந்தகாலங்களிலே செயற்பட்டுவந்தது. கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற கட்சிகளையும் ஒன்றிணைத்து தமிழ் தேசிய கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும் என்றுதான்நாங்கள்கடந்தகாலங்களில்இருந்து செயற்பட்டுக்கொண்டு வந்திருக்கின்றோம். அது அனைவருக்கும் தெரிந்த விடயம். கடந்த வருடத்திலே இந்திய பிரமர் நரேந்திர மோடி அவர்களுக்கு கடிதம் எழுதும் விடயமாக இருந்தாலும் சரி ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை ஆணையகத்திற்கு கடிதம் எழுதும் விடயமாக இருந்தாலும் சரி தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து தமிழ் தேசிய பரப்பில் அரசியல் செய்யும் ஏனைய கட்சிகளையும் நாங்கள் இணைத்திருந்தோம். ஆனால் உண்மையிலே சுமந்திரன் அவர்கள் தான் த.தே கூட்டமைப்பை மீறி தன்னிச்சையாக செயற்படுகின்றார். சம்பந்தன் ஐயா கூறினார் என்று சம்பந்தன் ஐயாவினுடைய பெயரைப் பயன்படுத்திக்கொண்டு அவர் செயற்படும் விதத்தினால் தான் இன்று கூட்டமைப்பு இந்த நிலைமையில் இருக்கின்றது. உண்மையிலே சொல்லப்போனால் த.தே கூட்டமைப்பின் வகிபாகத்தை என்னால் இரண்டு காலங்களாக பிரித்துப் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. 2009 மே 18 இன் முன்பு இருந்த த.தே கூட்டமைப்பிற்கும் அதற்கு பின்பு இருக்கும் த.தே கூட்டமைப்பிற்கும் இடையிலே பாரிய வித்தியாசம் இருக்கின்றது. ஏனென்றால் 2009 க்கு முன்பு த.தே கூட்டமைப்பிற்கு பின்னால் ஒரு சக்தி குறிப்பாக சொல்வதானால் தமிழீழ விடுதலைப்புலிகள் மிகவும் பலமாக இருந்த காலத்திலே அவர்களது அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு அவர்களது கட்டளை அவர்களது ஆலோசனையின் அடிப்படையில் எந்தவித குழப்பமும் இல்லாமல் ஒற்றுமையாக செயற்பட்டுக்கொண்டிருந்தது. 2009 மே 18 ற்கு பின்பு அந்த தலைமை முற்றுமுழுதாக தமிழரசுக் கட்சி அதாவது சம்பந்தன் ஐயா வந்ததன் பிற்பாடு தான் த.தே கூட்டமைப்பிற்குள்ளே இந்தளவிற்கு பிரச்சனைகள் வந்தது. குறிப்பாக சுமந்திரன் அவர்கள் த.தே கூட்டமைப்பிற்குள் வந்ததன் பிற்பாடு தான் சுமந்திரன் அவர்கள் கூட எப்படி த.தே கூட்டமைப்பிற்கு வந்தார் என்பது வெளிப்படையாக தெரியாவிட்டாலும் நாங்கள் சிலவற்றை அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. உங்களுக்கு தெரியும் த.தே கூட்டமைப்பு 2001 ஆம் ஆண்டு உருவாகி முதன் முதலாக 2002 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலிலே தமிழர் விடுதலைக் கூட்டணி சூரிய சின்னத்தில் தான் பாராளுமன்ற தேர்தலை சந்தித்திருந்தது 14 ஆசனங்களை பெற்றிருந்தது. அந்த வேளையில் ஆனந்த சங்கரி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு செயலாளராக இருந்தார். அவருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக அவர் தன்னுடைய கட்சியையும் சின்னத்தையும் தூக்கிக்கொண்டு சென்று விட்டார். அதன் பின்னர் தான் வீட்டு சின்னம் 2004 ஆம் ஆண்டு தேர்தலுக்காக 70 ஆம் ஆண்டுக்கு பின்பு தூசி தட்டி எடுக்கப்பட்டது. கிட்டத்தட்ட 34 வருடங்களாக இந்த வீட்டுச் சின்னம் தமிழரசுக் கட்சி எந்தவிதமான இயங்கு நிலையிலும் இல்லாமல் இருந்தது. பிரபாகரன் அவர்களினால் அந்த வீட்டு சின்னம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஏனென்றால் தந்தை செல்வா அவர்கள் அந்த வீட்டு சின்னத்தை உருவாக்கினார் என்று. ஆனால் 22 ஆசனங்கள் ஒற்றுமையாக 2004 ஆம் ஆண்டு தேர்தலிலே கைப்பற்றப்பட்டது. ஆனால் சுமந்திரன் அவர்கள் எப்படி இதற்குள் வருகின்றார் என்றால் சூரிய சின்னத்தை சங்கரி ஐயா தூக்கிச் சென்ற பொழுது தமிழரசுக் கட்சி அதற்கு எதிராக நீதி மன்றத்திலே வழக்கு தொடந்தார். அந்த வழக்கிலே வாதாட வந்த சட்டத்தரணி தான் சுமந்திரன். அந்த வழக்கிலே இலவசமாக சம்பந்தன் ஐயாவுக்காக வாதாடியதன் காரணத்தினால் அவருக்கு 2010 ஆம் ஆண்டு தேர்தலிலே தேசிய பட்டியலிலே இடம்தரலாம் எனக்கூறி அவர் அதற்குள் 2010 இல் வந்ததன் பின்பு தான் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் கூட்டமைப்பை விட்டு வெளியேற வேண்டிய ஒரு நிலையை அவர்கள் உருவாக்கினார்கள். ஏனென்றால் சுமந்திரன் அவர்களுக்கு தனக்கு சமாந்தரமானவர்களோ அல்லது தனக்கு மேலானவர்களோ இந்த கட்சியிலே இருந்தால் எதிர்காலத்தில் தனது பதவிக்கு ஆபத்து வரும் என்ற காரணத்தினால் சம்பந்தன் ஐயா அவர்களைப் பயன்படுத்தி கஜேந்திரகுமார் அவர்கள் வெளியேறினார். 2015 ஆம் ஆண்டு சுரேஸ் பிரேமச்சந்திரன் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சி வெளியேறுவதற்கான வழியை வகுத்தார்கள். ஏனென்றால் 2015 இல் 14 ஆசனங்களை தமிழ் தேசிய கூட்டமைப்பு பெற்றது. தமிழரசுக் கட்சி சார்பிலே 8 ஆசனங்களும் ஏனைய கட்சிகள் சார்பிலே 6 ஆசனங்களும் பெறப்பட்டது. இரண்டு தேசிய பட்டியல் ஆசனங்கள் பெறப்பட்ட போது உண்மையிலே சம்பந்தன் ஐயா ஒரு நியாயமான ஒரு தலைவராக தமிழ் தேசியத்தை கட்டி காப்பாற்ற வேண்டும் என்றவொரு எண்ணம் இருந்திருந்தால் அவர் அந்த 2 தேசிய பட்டியல் ஆசனங்களில் ஒன்றை தமிழரசுக் கட்சிக்கும் மற்றையதை ஏனைய கட்சிகளுக்கும் கொடுத்திருந்தால் யாழ்பாணத்திலே சுரேஸ் பிரேமச்சந்திரன் பாராளுமன்ற உறுப்பினராக வந்திருப்பார். ஆனால் சுமந்திரனுடைய சூழ்ச்சி 2010 இல் இருந்து 2015 வரையும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் பேச்சாளராக இருந்த சுரேஸ் பிரேமச்சந்திரன் பாராளுமன்றத்திற்குள் வந்தார். தொடர்ச்சியாக அவர் பேச்சாளராக இருந்துவிடுவார் என்றகாரணத்தினால் அவரை ஓரங்கட்ட வேண்டும் என்று அந்த இரண்டு தேசிய பட்டியலையும் தாங்களே தமிழரசுக் கட்சியில் பெற்றுக்கொண்டார்கள். என்று சொல்வதைவிட பிடுங்கிக்கொண்டார்கள். அபகித்துக்கொண்டார்கள். அந்த வேதனையுடன் சுரேஸ் பிரேமச்சந்திரன் வெளியேறுகின்றார்.



**"சுமந்திரனுடைய சூழ்ச்சி 2010 இல் இருந்து 2015 வரையும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் பேச்சாளராக இருந்த சுரேஸ் பிரேமச்சந்திரன் பாராளுமன்றத்திற்குள் வந்தார். தொடர்ச்சியாக அவர் பேச்சாளராக இருந்துவிடுவார் என்ற காரணத்தினால் அவரை ஓரங்கட்ட வேண்டும் என்று அந்த இரண்டு தேசிய பட்டியலையும் தாங்களே தமிழரசுக் கட்சியில் பெற்றுக்கொண்டார்கள். என்று சொல்வதைவிட பிடுங்கிக்கொண்டார்கள்."**

**"சுமந்திரன் அவர்களுக்கு தனக்கு சமாந்தரமானவர்களோ அல்லது தனக்கு மேலானவர்களோ இந்த கட்சியிலே இருந்தால் எதிர்காலத்தில் தனது பதவிக்கு ஆபத்து வரும் என்ற காரணத்தினால் சம்பந்தன் ஐயா அவர்களைப் பயன்படுத்தி கஜேந்திரகுமார் அவர்கள் வெளியேறினார்."**

**தொடரும்...**

**நேர்காணல் : மறவன்**

# சுதந்திர தினம்

# தமிழினத்திற்கு கரிநாள்

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து நடைபெறவிருக்கின்ற முதலாவது சுதந்திர தினமும், இலங்கையில் 75ஆவது சுதந்திர தினம் கொண்டாட்டம் இதுவாகும். அரசாங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு காலிமுகத் திடலில் முப்படைகளின் அணிவகுப்புடன் இராணுவ பலத்தை வெளிக்காட்டியவாறு சுதந்திரம் வழமைப்போல் கொண்டாட்டப்படும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. மிக நீண்டகால காலனித்துவ ஆட்சியிலிருந்து மீண்டு 1947ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை மக்களுக்கு சுதந்திரம் கிடைத்ததாகக் கூறப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் இந்த நாள் கொழும்பில் பாதைகள் மூடப்பட்டு, ஒத்திகைகள் மேற்கொள்ளப்பட்டு, அணிவகுப்பு நடத்தப்பட்டுத்தான் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனால், உண்மையிலேயே மக்கள் சுதந்திரத்தை உணர்கிறார்களா? என்ற ஒரு கேள்வி எழும்புகின்றது. 75வது சுதந்திர தினத்திற்கு முன்பதாக தமிழ் மக்களுக்கான தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படும் என்று கூறப்பட்டது. எனினும் தற்பொழுது சொல்லப்பட்ட ஒரு கருத்தாக மட்டுமே காணப்படுகின்றது.

அந்த வகையில் இலங்கை சுதந்திரமடைந்த வரலாற்றினை நோக்குகின்ற பொழுது கி.பி 1505 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரினால் இலங்கையின் கரையோர பிரதேசம் கைப்பற்றப்பட்டது இதனைத்தொடர்ந்து கி.பி 1602 ஒல்லாந்தரின் ஏகாதிபத்தியத்துக்கு இலங்கையர்கள் அடிமைப்பட வேண்டி ஏற்பட்டதுடன், 1848 ஆம் ஆண்டு மாத்தளை பெருங்கிளர்ச்சி ஆரம்பமானதுடன் அது இலங்கை சுதந்திர போராட்டத்தின் இறுதி கிளர்ச்சியாக அமைந்தது. 1796ஆம் ஆண்டில் இலங்கையின் ஒரு பகுதி மாத்திரம் பிரிட்டனின் ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்படுத்தப்பட்டு இருந்தது. அதன் பின்னர் 1815 ஆம் ஆண்டில் முழு நாடும் பிரிட்டனின் நிர்வாகத்திற்கு உட்பட்டிருந்த யுகம் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி முடிவிற்கு வந்தது.

1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கை மக்களுக்கு சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரம் கிடைத்த பின்னர் கடந்த 75 வருட காலப்பகுதியில் 1948 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு இரத்து செய்யப்பட்ட பின்னர் இரண்டு அரசியல் யாப்புகள் மூலம் நாடு முன்னெடுக்கப்பட்டது. இதில் முதலாவது 1972 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட மக்கள் குடியரசு யாப்பு ஆகும். அத்தோடு இரண்டாவது 1978 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்பு அமைப்பாகும். வரலாற்றின் ஆரம்பத்தில் இருந்து தாய்நாட்டின் இறைமைக்காக இரத்தம் சிந்தியமை மற்றும் உயிரை தியாகம் செய்தவர்களின் எண்ணிக்கை அளப்பரியதாகும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எமது தாய்நாட்டை கட்டுப்படுத்திய நாள் தொடக்கம் நாட்டு மக்கள் சுதந்திரத்திற்காக மேற்கொண்ட அளப்பரிய அர்ப்பணிப்பின் பெறுபேறே இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திரமாகும். அடிமைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு கிளர்ச்சி மத்தியில் உயிரை தியாகம் செய்த பத்தாயிரம் பேரான தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கியர் போன்ற நாட்டு பற்றைக் கொண்ட அனைவரதும் அர்ப்பணிப்புடனும் ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்றதை நாம் மறந்துவிட முடியாது.

எனினும் தற்போதை நாட்டின் பொருளாதார நெருக்கடியிலும் இந்த சுதந்திர தின கொண்டாட்டம் தேவையா? சுதந்திர தினத்திற்கு இவ்வளவு பணம் செலவு செய்ய வேண்டுமா? போன்ற கேள்விகள் பலர் மனதில் எழும்புகின்ற இந்த நேரத்திலும் தமிழர்களுக்கான சுதந்திர தினம் இன்னமும் இல்லை என்ற மனோ நிலையே தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. ஏனென்றால் மைத்திரி தொடக்கம் ரணில் விக்கிரமசிங்க வரை தமிழர்களுடைய பிரச்சனைக்கான தீர்வினை பெற்று தருவதாக கூறுகின்றார்களே தவிர அவற்றை நடைமுறைப்படுத்துவதாக தெரினவில்லை. அத்துடன் இன்று தமிழ் மக்களுடைய பிரச்சனைக்கான தீர்வு என்பது கிடப்பில் போடப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. சுதந்திரம் இல்லாதா நாட்டில் எப்படி சுதந்திர தினத்தை கொண்டாடுவது போன்றே தமிழர்களது நிலைமை காணப்படுகின்றது.




**“ஆங்கிலேயரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்திருந்தாலும் தமிழ் மக்களாகிய எமக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை.”**

இலங்கையின் எழுபத்து ஐந்தாவது சுதந்திரதினக் கொண்டாட்டத்திற்கு 200மில்லியன் ரூபா செலவாகுமென உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார். சுமார் 575 மில்லியன் ரூபா செலவாகுமென மதிப்பிட்டதாகவும், ஆனால் பொருளாதார நெருக்கடி நீடிப்பதால், செலவுகளைக் குறைத்துக்கொள்ள அரசாங்கம் ஆலோசனை வழங்கியதாகவும் அமைச்சர் தெரிவித்தார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் அசோக பிரியந்த இவ்வாறு கூறினார். செலவுகளைக் குறைக்க வேண்டும் என்பதால் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி 200மில்லியன் ரூபா வரை குறைத்ததாகவும் இந்தச் செலவுத் தொகையை மேலும் குறைப்பதற்குரிய மதிப்பீடுகள் தொடர்ந்து செய்யப்படுவதாகவும் கூறினார். சுதந்திர தின அணிவகுப்பு கொள்ளுப்பிட்டி சந்தியில் இருந்து ஆரம்பமாகி காலி முகத்திடலில் முடிவடையும். அதேவேளை, காலி முகத்திடலில் இடம்பெறவுள்ள சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஸ் குணவர்த்தன ஆகியோர் நிகழ்வில் கலந்துகொள்வார்கள் என்றும் அமைச்சர் கூறினார். தமிழர்களின் பிரச்சினைக்குரிய தீர்வை சுதந்திர தினத்துக்கு முன்பாக அறிவிப்பேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். ஆனால் பின்னர் அது பற்றி எதுவுமே கூறவில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ச்சியாக மூன்று சுற்றுப் பேச்சுக்கள் இந்த மாதம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒரு சுற்றுப் பேச்சுடன் தொடர் பேச்சுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன. ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியிருந்தது. சுட்டிகாட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

இலங்கையின் 75வருட சுதந்திர தினம் என்பது தமிழ் மக்களை பொறுத்தவரையில் தமிழர்களுக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை என்றே கூற முடியும். அதே நேரம் இன்று பெருபான்மை இன மக்கள் மத்தியிலும் இவ்வருட சுதந்திர தின என்பது தேவை தானா என்றே நோக்கப்படுகின்றது. ஏனென்றால் பொருளாதார நெருக்கடி இருப்பதனால் தேர்தலை உரிய காலத்தில் நடத்த முடியாத ஓர் சூழல் காணப்படுகின்றது. தேர்தலுக்கான பணத்தை செலவு செய்ய அரசாங்கத்திடம் போதிய பணம் இல்லை என்று கூறுகின்றார்கள். அப்படியான ஒரு சூழலில் சுதந்திர தின கொண்டாட்டத்திற்கு இவ்வளவு கோடி பணம் செலவு செய்ய வேண்டுமா? என்ற ஒரு கேள்வி அரசியல்வாதிகள் மத்தியில் எழுப்படுகின்றது. ஒரு நாட்டில் ஒரு தேர்தலை நடத்தி ஜனநாயக முறைப்படி, மக்களுக்கு ஒரு புதிய ஆட்சி முறையை உருவாக்குவது, மக்களுக்குள்ள ஜனநாயக உரிமை. அதனை இன்று இந்த அரசாங்கம் செய்யாமல் சுதந்திர தின நிகழ்வுக்கு செலவழிப்பது என்பது எந்த வகையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக பார்க்கப்படுகின்றது. அது மாத்திரமன்றி அரசாங்கத்தின் புதிய வரி அறவீட்டு முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து அரச மற்றும் தனியார் துறை தொழிற்சங்கங்களினால் "கறுப்பு வாரம்" முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், கறுப்பு வாரத்திற்கு ஆதரவு தெரிவித்து மத்திய வங்கி, அரச மற்றும் தனியார் வங்கிகள், துறைமுகம் ஆகிய பிரிவுகளில் ஊழியர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் என பலரும் அன்று (ஜன 27) கொழும்பு கோட்டையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சுதந்திரம் இல்லாத நாட்டில் எதற்காக கோடிக்கணக்கில் செலவழித்து சுதந்திர தினம் கொண்டாட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் ரத்நாயக்க யாழ்ப்பாணத்தில் அன்றைய தினம் (20) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கேள்வியெழுப்பியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலத்தில் நாட்டில் கொடுங்கோல் ஆட்சி புரிந்த ஆட்சியாளர்களை விரட்டுவதற்கு, ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபட்ட பல இளைஞர்கள், யுவதிகள் தற்போதும் சிறையில் வாடுகின்றனர். இவ்வாறான நிலையில் சுதந்திர தினம் தேவைதானா? முதலில் அவர்களுக்கு விடுதலையை கொடுங்கள். அதன் பிறகு நீங்கள் சுதந்திர தினத்தை கொண்டாடலாம். என கூறியிருக்கின்றார்.



நாட்டின் சுதந்திர நாள் தமிழர்களுக்கு கரிநாள் எனத் தெரிவித்துள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பெப்ரவரி 4ஆம் திகதி தமிழர் தாயகம் எங்கும் சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தை புறக்கணித்து மக்கள் எழுச்சிப் பேரணியில் ஒன்றுகூடுமாறு அழைப்பு விடுத்துள்ளனர். மாணவர் ஒன்றியம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் ஆங்கிலேயரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்திருந்தாலும் தமிழ் மக்களாகிய எமக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை. சிங்களப் பேரினவாத அரசின் திட்டமிடப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்வதால் பெப்ரவரி 4 ஆம் திகதியை காலம் காலமாக தமிழர்கள் கரிநாளாகத்தான் அனுஷ்டித்து வருகிறோம். தமிழர் தாயகப் பகுதிகளில் மக்களின் பூர்வீகக் காணிகள் அபகரிப்பு, பௌத்த மயமாக்கல் என்பன இன்று வரை புதிய புதிய வடிவங்களில் தொடர்கின்றன. போர் முடிந்து 14 ஆண்டுகள் கழிந்தும் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவில்லை, தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை, தமிழின படுகொலைக்கான நீதி கிடைக்கவில்லை, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் அரசு பொறுப்புக் கூறவில்லை. தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் இலங்கை அரசு ஏமாற்றி வருகிறது. அரச படைகளால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை தேடி வருடக்கணக்காக போராடி வருகிறார்கள். தமிழ் அரசியல் கைதிகள் 10 வருடங்களுக்கு மேலாக தமது விடுதலையை எதிர்பார்த்து சிறையில் வாடுகிறார்கள். தமது பூர்வீக நிலங்களை பறிகொடுத்து விட்டு இன்று வரை வீதியில் போராடி வருகிறார்கள். தமிழர் பகுதிகளில் தமிழருக்கு அனுமதி வழங்காமல் சிங்களக் குடியேற்றங்களுக்கு அனுமதி வழங்குகிறார்கள். தமது உரிமைகளுக்காக போராடும் மக்கள் கைது செய்யப்பட்டு அச்சுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் இருப்பு தற்போது கேள்விக்குறியாகியுள்ள நிலையில் இந்த சுதந்திர நாளை நாம் கரிநாளாக பிரகடனப்படுத்தி எமது எதிர்ப்பை இந்த அரசுக்கும் தெரிவிப்பதுடன் சர்வதேசத்துக்கு தமிழ் மக்களின் உண்மை நிலையை உரத்துக் கூற வேண்டும். என யாழ்பல்கலைகழக ஒன்றியம் தெரிவித்திருக்கின்றது.

அதே நேரத்தில் தமிழ் அரசியல்வாதிகளும் அரசியல் கட்சிகளும் தங்களுக்குள் போட்டி போட்டுக்கொண்டு இருக்கின்றார்களே தவிர் தமிழ் மக்களுடைய பிரச்சனைகளை தீர்க்கும் விதமாக பயணிக்கின்றார்களா என்பது கேள்வியாக தான் பார்க்கமுடிகின்றது.

**மாதூரி**

# ஊடகப்படுகொலைகளை மூடி மறைக்கும் இலங்கை அரசு – நீதி கிடைக்குமா?



சிறிலங்காவில் மனிதப் படுகொலைகள், கடத்தல்கள் மற்றும் ஊடகவியலாளர் மீதான தாக்குதல் சம்பவங்கள் நீண்டு செல்கின்றன. சுடர் ஒளி என்கின்ற தமிழ்ப் பத்திரிகையின் சுயாதீன ஊடகவியலாளரான 35 வயதேயான சுப்ரமணியம் சுகிர்தராஜன் ஜனவரி 24, 2006ல் திருகோணமலையில் தனது வீட்டிற்கு முன்னால் பேரூந்திற்காக காத்திருந்த போது ஆயுததாரிகளின் துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்டார். இரு பிள்ளைகளின் தந்தையாரான இவர் துறைமுக அதிகாரசபையில் பணியாற்றினார். ஆனால், இவர் படுகொலை செய்யப்படுவதற்கு மூன்று வாரங்களின் முன்னர், திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் ஜனவரி 02, 2006 அன்று படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை ஒளிப்படம் எடுத்திருந்தார்.

இந்த ஒளிப்படங்கள் மாணவர்களின் படுகொலைச் சம்பவத்தை வலுவாக உறுதிப்படுத்துகின்ற சாட்சியமாக அமைந்துள்ளன. அதிர்ச்சியடைய வைக்கும் இந்த ஒளிப்படங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்டன. இதனால் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போதே மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்பதை உறுதிப்படுத்துகின்ற இந்த ஒளிப்படங்கள் சிறிலங்கா அரசாங்கத்திற்கு சவால் மிக்கதாக அமைந்தது. மாணவர்களின் படுகொலையை உறுதிப்படுத்தும் ஒளிப்படங்கள் வெளியிடப்பட்டு மூன்று வாரங்களின் பின்னர் ஊடகவியலாளரான சுகிர்தராஜன் படுகொலை செய்யப்பட்டார். சிறிலங்கா இராணுவத்தினர் இப்படுகொலையுடன் தொடர்புபட்டுள்ளனர் எனக் குற்றம் சாட்டப்பட்ட போதிலும், இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. தமது கடமையைச் சரிவரச் செய்வதற்காக தமது உயிர்களைக் கொடுத்த ஊடகவியலாளர்களின் படுகொலைகளுடன், காணாமற் போதல்கள் போன்றவற்றுடன் தொடர்புபட்ட வழக்குகள் எவ்வித தீர்வுமின்றி காணப்படுகின்றன. இந்த நீண்ட பட்டியலில் ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் பெயரும் இணைக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களில் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையும் ஒன்றாகும். இதைவிட கேலிச்சித்திர வடிவமைப்பாளரான பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டமை, உதயன் நாளிதழ் மீது தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள், பத்திரிகையாளரும் ஊடக செயற்பாட்டாளருமான பொடல ஜெயந்த கடத்தப்பட்டு சித்திரவதைப்படுத்தப்பட்டமை போன்றன குறிப்பிடத்தக்க ஊடக அடக்குமுறைச் சம்பவங்களாகும். ஊடக அடக்குமுறையின் நீண்ட பட்டியலில் சுகிர்தராஜன் அடிக்குறிப்பாக காணப்படுகிறார். இவரைப் போல படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டிருந்த சிறிலங்காவின் வடக்கில் தொழிற்படும் ஊடகத் தொழிற்சாலை தனது செயற்பாடுகளை எவ்வித தடங்களுமின்றி தொடர்ந்தும் மேற்கொள்வதற்காக ஊடக வன்முறைகளின் சுமைதாங்கிகளாக தம்மை அர்ப்பணித்துள்ளனர். இவர்கள் நீதியை நிலைநிறுத்துவதற்காக உயர்ந்த குறிக்கோளோடு, பிழைகளைத் தட்டிக்கேட்டு செயற்பட்டுள்ளனர். இந்த வகையில் இவர்கள் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்காக தம்மையே விலையாகக் கொடுத்துள்ளனர். சிறிலங்கா அரசின் அடக்குமுறையால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களாவர். இவர்களில் ஊடகப் பணியாளர்களும் அடங்குவர். நேரடியாக பத்திரிகைகளில் செய்திகளை எழுதுபவர்கள் தவிர பத்திரிகைத்துறையுடன் சம்பந்தப்பட்ட பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எடுத்துக்காட்டாக, யாழ்ப்பாணத்தில் போர் தீவிரம் பெற்றிருந்த காலப்பகுதியில், பத்திரிகைகளை விநியோகித்தவர்கள் மரணத்தை எதிர்பார்த்தவாறே இந்தப் பணியைச் செய்ய வேண்டியிருந்தது. போர் தீவிரம் பெற்றிருந்த பொழுதுகளில் ஒவ்வொரு நாட்காலையிலும் தமது உந்துருளிகளில் செய்தித்தாள்களைக் வெவ்வேறு இடங்களுக்கு கொண்டு சென்ற பத்திரிகை விநியோகத்தர்கள் மரண அச்சுறுத்தல்களை எதிர்கொண்டனர். யாழ்ப்பாணத்தில் பத்திரிகை விநியோகத்தில் ஈடுபட்ட மரியதாஸ் மனோஜன்ராஜ், சதாசிவம் பாஸ்கரன் போன்றோர் படுகொலை செய்யப்பட்டனர். வடக்கிலும் சிறிலங்காவின் இதர பகுதிகளிலும் பணிபுரிந்த ஊடகவியலாளர்கள் அவர்களின் எதிர்த்தரப்பு ஆயுதக் குழுக்களால் படுகொலை செய்யப்பட்டும், அச்சுறுத்தப்பட்டும் உள்ளனர்.

மே 28, 2008 அன்று News First மற்றும் சக்தி தொலைக்காட்சி சேவையின் யாழ்ப்பாண செய்தியாளரான பரநிரூபசிங்கம் தேவகுமார், தமிழீழ விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்பட்ட சிலரால் படுகொலை செய்யப்பட்டார். சிறிலங்காவை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியானது யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை மேற்கொண்ட போது பரநிரூபசிங்கம் தேவகுமார் இதனை ஒளிப்பதிவு செய்திருந்தார். அதனைத் தொடர்ந்து புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் குழுவொன்றால் தேவகுமார் படுகொலை செய்யப்பட்டார். தமிழ்ப் புலிகளின் விருப்பத்திற்கு மாறாக தேவகுமார் செயற்பட்டார். இதனால் அவர் தனது உயிரை அர்ப்பணிக்க வேண்டியிருந்தது. இவரைப் படுகொலை செய்தவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட போதும் போதியளவு சான்றுகள் இல்லாததால் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

2004ல் சமாதானம் எட்டப்பட்ட போது, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. இக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் செயற்பாட்டாளர்கள் புலிகளால் அச்சுறுத்தப்பட்டனர். இந்த வரிசையில், ஆகஸ்ட் 16, 2004ல் ஈ.பி.டி.பி யின் ஊடக செயலாளரும் மூத்த உறுப்பினருமான கந்தசாமி ஐயர் கொழும்பில் புலிகள் அமைப்பின் துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்டார்.

தற்போது அரசாங்கத்தில் அமைச்சராக உள்ள கருணா என அறியப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனின் கீழ் கருணா குழு, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற பின்னர் பல ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மே 31, 2004ல் 'வீரகேசரி நாளிதழில்' பணியாற்றிய ஐயாத்துரை நடேசன் என்கின்ற தமிழ் ஊடகவியலாளர், மட்டக்களப்பில் கருணா குழுவால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். இதேபோன்று தமிழ்நெற் இணையத்தள ஆசிரியரான தர்மரட்ணம் சிவராம் மே 28, 2005ல் இராணுவப் புலனாய்வாளர்களுடன் இணைந்து செயற்படும் துணை ஆயுதக் குழுவினரால் படுகொலை செய்யப்பட்டார். சிவராம் படுகொலையுடன் தொடர்புபட்டதாக சந்தேகிக்கப்பட்ட புளொட் அமைப்பைச் சேர்ந்த இருவர் சிறிலங்கா காவற்துறையினரால் கைதுசெய்யப்பட்டனர். சந்தேக நபர்களில் ஒருவரான பீற்றர் என அறியப்படும் ஆறுமுகம் சிறிஸ்கந்தராஜா குற்றம் சாட்டப்பட்டார். இப்படுகொலை தொடர்பான வழக்கு இப்படுகொலைஇடம்பெற்றுஐந்துஆண்டுகளின் பின்னர் அதாவது யூலை 2011ல் மீண்டும் தொடரப்பட்டது. ஆனால் உரிய சாட்சியங்கள் விசாரணைக்கு சமூகமளிக்காததால் இந்த வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. சிவராம் படுகொலைச் சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டார். இவ்வாறான படுகொலை வழக்குகள் பெரும்பாலானவற்றை சிறிலங்கா இராணுவத்தினரே மேற்கொண்டனர் என சாட்சிகள் உறுதிப்படுத்துகின்ற போதிலும் இவை தொடர்பான விசாரணைகள் ஒத்திவைக்கப்படுகின்றன.

பிரகீத் எக்னெலிகொட என்கின்ற கேலிச்சித்திர வடிவமைப்பாளர் தனது செயலகத்தில் 'தொடர்பாளர்' ஒருவரைச் சந்திப்பதற்காகச் செல்வதாக கூறிவிட்டு சென்றிருந்தார். அதன் பின்னர் இவர் காணாமற் போய்விட்டார். தான் தொடர்பு கொள்ள வேண்டிய தொடர்பாளரிடமிருந்து தொலைபேசி அழைப்பைப் பெற்ற பின்னர் எக்னெலிகொட செயலகத்தை விட்டுப் புறப்பட்டிருந்தார். இவர் காணாமற்போன பின்னர் இறுதியாக எக்னெலிகொட பெற்றுக் கொண்ட தொலைபேசி அழைப்பு எங்கிருந்து கிடைக்கப் பெற்றது என்பதை குற்றவியல் விசாரணைத் திணைக்களம் ஆராய்ந்த போது அந்த அழைப்பானது மட்டக்களப்பிலிருந்து பெறப்பட்டது என்பது அறியப்பட்டது. அரசியல் தலையீடு காரணமாக குறித்த சந்தேகநபர் மீது குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணை மேற்கொள்வதை ஒத்திவைத்தனர். இவ்வாறான சில வழக்கு விசாரணைகளை நீதிமன்றம் விசாரணை செய்யும் போது இந்தக் கொலைச் சம்பவங்களில் சிறிலங்கா அரசு தொடர்புபட்டுள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

சிறிலங்கா இராணுவப் புலனாய்வாளர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியதாக நம்பப்படும் சுயாதீன ஊடகவியலாளரான சம்பத் லக்மல் யூன்02,2006 அன்று இரவு வீட்டை விட்டு புறப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டார். இவர் இராணுவத்தினருக்கு தகவல் வழங்குனராகச் செயற்பட்டார். சம்பவம் நடந்த இரவு லெப்ரினன் தர இராணுவ அதிகாரியான 'குமார் சேர்' என்பவரிடமிருந்து அழைப்பைப் பெற்ற பின்னரே இவர் வீட்டை விட்டு வெளியே சென்றிருந்தார். லெப்ரினன் குமார் என்பவருடன் தனது மகன் தொலைபேசியில் உரையாடியதை தான் கேட்டுக் கொண்டிருந்ததாக படுகொலை செய்யப்பட்ட சம்பத் லக்மலின் தாயாரான றூபா டீ சில்வா பின்னர் தெரிவித்தார். சம்பத் லக்மலின் உடலம் தெகிவளையில் கண்டுபிடிக்கப்பட்டது. இவர் துப்பாக்கியால் சுடப்பட்டே படுகொலை செய்யப்பட்டிருந்தார். இவரது படுகொலை தொடர்பில் உறுதியான சான்று காணப்பட்ட போதிலும், இவரது தாயார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த போது இதனுடன் தொடர்புபட்ட எவரும் கைதுசெய்யப்படவில்லை.

அண்மைய ஆண்டுகளில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களில் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை முதன்மையானது. இவரது படுகொலை இராணுவப் புலனாய்வாளர்களுடன் தொடர்புபட்டதாகும். ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவை இராணுவப் புலனாய்வாளர்கள் மிக நெருக்கமாக கண்காணித்து வந்தனர். முன்னாள் இராணுவப் புலனாய்வு இயக்குனர் மேஜர் ஜெனரல் அமல் கருணாசேன, லசந்த விக்ரமதுங்கவின் படுகொலையை வழிநடத்தியதாக அறியப்படுகிறார்.

இதேபோன்று முன்னாள் இராணுவப் புலனாய்வு அதிகாரியான கந்தேஜெதரபியவன்ச மற்றும் மலையகத் தமிழ் இளைஞரான பிச்சை யேசுதாசன் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். பின்னர், பியவன்ச பிணையில் விடுவிக்கப்பட்டார். பியவன்சால் வழங்கப்பட்ட வாக்குமூலத்தின் பிரதி ஒன்றை வழங்குமாறு கோரப்பட்ட போதும் குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவு அதனை மறுத்தது. இதன் பின்னர் லசந்த விக்கிரமதுங்கவின் மற்றைய படுகொலைச் சந்தேகநபரான யேசுதாசன் ஒக்ரோபர் 15, 2011ல் சிறையில் இறந்துவிட்டார். முன்னாள் பத்திரிகை ஆசிரியரான லசந்த படுகொலை செய்யப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்த போதிலும் நீதி இன்னமும் நிலைநாட்டப்படவில்லை. ஊடகவியலாளர்கள் மீதும் ஊடத்துறை மீதும் கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகளுக்கு சிறிலங்கா அரசாங்கம் மேலும் மேலும் துணைபோகின்றது.

**தொடரும்...**
**துரியோதரன்**

# பிராந்திய செய்திகள்

## யாழ். வலயம் தேசிய மட்டத்தில் முதல் நிலை

தரம் ஐந்து புலமைப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். கல்வி வலயம் தேசிய மட்டத்தில் முதல் நிலையைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

இவ் வருடம் தரம் 5 பொதுப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் தொகை -329.668 இதில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை- 48.257ஆகும்.

வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களின் சதவீதம்-14.64%. வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் வட மாகாணத்தில் பரீட்சைக்குத் தோற்றியோர் எண்ணிக்கை - 17.622
வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள் தொகை - 2749
அதன் சதவீதம் - 15.6%. தேசிய மட்டத்தில் நிலை - 6 வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் வலயங்களின் தேசிய மட்ட நிலை

யாழ். கல்வி வலயம் - (25.37%) - 1
பொலநறுவை வலயம் - (21.71%) - 2
தங்காலை வலயம் - (21.51%) - 3
கம்பஹா கல்வி வலயம் - (21.44%) - 4
வலஸ்முல்ல வலயம் - (20.80%) - 5
பதுளை கல்வி வலயம் - (20.41%) - 6
நிக்கரவெட்டிய வலயம் - (20.03%) - 7




## பட்டதாரிகளுக்கு அரசாங்க வேலை வாய்ப்பு

தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் காணப்படும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களுக்கு, போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது அரச சேவையில் இருக்கும் பட்டதாரிகளே இதற்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும், அது தொடர்பான விண்ணப்பங்களை applications.doenets.lk/exams என்ற இணையத்தளத்திற்கு சென்று பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.



## சுதந்திர தின கொண்டாட்டம் மற்றும் அதன் ஒத்திகை காரணமாக விசேட போக்குவரத்து திட்டம்

75வது தேசிய சுதந்திர தின கொண்டாட்டம் மற்றும் அதன் ஒத்திகை காரணமாக காலி முகத்திடல் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் விசேட போக்குவரத்து திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சனி (28), ஞாயிறு (29) மற்றும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் சுதந்திர தினம் வரையான காலப்பகுதியில், அதிகாலை 5:00 மணி முதல் மதியம் 12:00 மணி வரை இந்த போக்குவரத்து திட்டம் அமுல்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி முகத்திடல் மத்திய வீதி - காலி முகத்திடல் சுற்றுவட்டத்திலிருந்து என். எஸ். ஏ. சுற்றுவட்டம் வரை மற்றும் சைத்திய வீதியின் கொள்ளுப்பிட்டி சந்தியிலிருந்து காலி முகத்திடல் நோக்கிய வீதி மற்றும் கொள்ளுப்பிட்டி புகையிரத நிலைய வீதியின் போக்குவரத்து குறித்த காலப்பகுதியில் மட்டுப்படுத்தப்படும்.

இதன் காரணமாக குறித்த திகதிகளில் ஒத்திகை மற்றும் சுதந்திர தின நிகழ்வுகளின் போது மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு பொலிஸார் சாரதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## செல்லப்பிராணியை காப்பற்ற கிணற்றில் இறங்கிய இளைஞன் பலி

செல்லப்பிராணியை மீட்க கிணற்றில் இறங்கிய சிரேஸ்ட ஊடகவியலாளரின் மகன் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் கிளிநொச்சி உதயநகர் பகுதியை சோகத்தில் ஆழ்த்தியது.

குறித்த சம்பவம் அன்று(27) காலை இடம்பெற்றது. கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உதயநகர் பகுதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

செல்லப்பிராணியாக வளர்க்கப்பட்ட வீட்டு நாய் கிணற்றில் விழுந்துள்ளது. குறித்த நாயை மீட்பதற்காக குறித்த இளைஞன் பாதுகாப்பற்ற குறித்த கிணற்றில் தும்பு கயிறை பயன்படுத்தி இறங்கியுள்ளார்.

கயிறு அறுந்து கிணற்றில் விழுந்த குறித்த இளைஞன் மேல் ஏறாத நிலையில் தந்தை அயலவரின் உதவியுடன் தேடியுள்ளார். சேற்றில் புதைந்த நிலையில் குறித்த இளைஞன் மாட்டிக்கொண்டமையால் உயிர் இழக்க நேரிட்டுள்ளது.

இந்த நிலையில் அயலவர்களின் உதவியுடன் நீர் இறைக்கப்பட்டு குறித்த இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 24 வயதுடைய விவேகாநந்தன் வேணிலவன் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## தம்பதியினர் வெட்டி படுகொலை

வீடொன்றில் தம்பதியினர் வெட்டி படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர் அம்பலாந்தோட்டை ரு/ஹறனு ரிதிகம மூன்றாம் கட்டை பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்குள் அன்று (27) காலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் படுகொலை செய்யப்பட்ட நபரின் மைத்துனர் ஒருவர் அம்பலாந்தோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் அம்பலாந்தோட்டை பெலிகலகொட பிரதேசத்தை சேர்ந்தவர். குறித்த சந்தேகநபர் வீட்டுக்குள் புகுந்து கோடாரி மற்றும் கத்தியால் தாக்கி இந்த இரட்டை கொலையை செய்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். 61 வயதான வெங்கப்புலி ஆராச்சிகே சுனில் மற்றும் 56 வயதான ஹேவமானகே குசுமலதா என்ற திருமணமான தம்பதியே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். சில காலமாக நிலவி வந்த தகராறு காரணமாக இந்த கொலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



## தாய்ப் பால் புரக்கேறி 30 நாட்களேயான குழந்தை உயிரிழப்பு!


யாழில் தாய்ப் பால் புரக்கேறி 30 நாட்களேயான குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. புத்தூர் நவக்கரி, மாதா கோவிலடியை சேர்ந்த ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, தாயிடம் பாலருந்திய போது திடீரென புரக்கேரியது இதனை அடுத்து அச்சுவேலி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது குழந்தை உயிழந்துள்ளது. குழந்தையின் உடல் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு உடற்கூற்று பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். அன்று (ஜன 28) 31 ஆம் நாள் நிகழ்வுகள் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்த வேளையில் குழந்தையின் இறப்புச் சம்பவம் அவர்களது குடும்பத்தை பாரிய சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

# சினி துளிகள்




## ஐஸ்வர்யா ராய்க்கு இதுதான் தாய்மொழியா?

நடிகை ஐஸ்வர்யா ராய் 90களில் தொடங்கி தற்போது வரை முக்கிய நடிகையாக இருந்து வருபவர். திருமணத்திற்கு பின் நடிப்பதை குறைத்து கொண்ட அவர் குறைந்த அளவிலானா படங்களில் தான் நடிக்கிறார்.

கடந்த வருடம் ரிலீஸ் ஆன பொன்னியின் செல்வன் படத்தின் மூலமாக அவர் மீண்டும் எல்லோரையும் திரும்பி பார்க்க வைத்தார்.

ஐஸ்வர்யா ராய் மும்பையில் வசித்தாலும் அவரது தாய்மொழி துளு தான். அவர் தனக்கு மொத்தம் 5 மொழிகள் தெரியும் என இளம் வயதில் கொடுத்த பேட்டியிலேயே கூறி இருக்கிறார்.

ஹிந்தி, மராத்தி, துளு (தாய்மொழி), தமிழ், ஆங்கிலம் என மொத்தம் அவருக்கு 5 மொழிகள் தெரியுமாம்.



## "பொம்மை நாயகி" படத்தின் முன்னோட்டம்




தமிழின் முன்னணி நகைச்சுவை நடிகரான யோகி பாபு கதையின் நாயகனாக நடித்திருக்கும் "பொம்மை நாயகி" எனும் திரைப்படத்தின் முன்னோட்டம் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஷான் இயக்கத்தில் தயாராகி இருக்கும் புதிய திரைப்படம் "பொம்மை நாயகி". இதில் யோகி பாபுவுடன் ஹரிகிருஷ்ணன், சுபத்ரா, ஸ்ரீமதி, ஜி.எம். குமார், அருள் தாஸ், லிசி அண்டனி, எஸ்.எஸ். ஸ்டான்லி, ஜெயச்சந்திரன், "ரொக்ஸ்டார்" ரமணியம்மாள் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள்.

ஆர்.அதிசயராஜ் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்துக்கு கே.எஸ். சுந்தரமூர்த்தி இசையமைத்திருக்கிறார். எளிய மக்களின் யதார்த்த வாழ்வியலை மையப்படுத்தி தயாராகி இருக்கும் இந்த திரைப்படத்தை நீலம் புரொடக்ஷன்ஸ் மற்றும் யாழி பிலிம்ஸ் ஆகிய நிறுவனங்கள் சார்பில் இயக்குநர் பா. ரஞ்சித் தயாரித்திருக்கிறார்.

இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் மற்றும் இரண்டு பாடல்கள் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்ற நிலையில், தற்போது இப்படத்தின் முன்னோட்டம் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த முன்னோட்டத்தில் யோகி பாபு - சுபத்ரா தம்பதிகளுக்கு ஒரு பெண்பிள்ளை இருக்கிறாள். அவள் தான் உலகம் என யோகி பாபு வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார்.

ஒரு புள்ளியில் அந்தப் பெண்பிள்ளை தொலைந்து போகிறாள். அவளைத் தேடி தந்தையான யோகி பாபுவின் பயணத்தையே வலியுடனும் சோகத்துடனும் இந்த படம் சொல்கிறது. மேலும், காணாமல் போகும் பெண்பிள்ளைகள் குறித்து சமூகத்தின் பொறுப்பு என்ன என்பது போன்ற வினாவையும் எழுப்புகிறது. இதனால் "பொம்மை நாயகி" படைப்புக்கு ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பு எழுந்திருக்கிறது. இதனிடையே இந்தத் திரைப்படம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் மூன்றாம் திகதியன்று உலகம் முழுவதும் பட மாளிகையில் வெளியாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## பலரின் கவனத்தை ஈர்த்து வரும் அயலி

இயக்குனர் முத்துக்குமார் இயக்கத்தில் உருவாகியுள்ள வெப்தொடர் "அயலி". எட்டு எபிசோடுகள் அடங்கிய இந்த தொடரில் அபி நட்சத்திரா, அனுமோல், அருவி மதன், லிங்கா மற்றும் சிங்கம்புலி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

மருத்துவராக வேண்டும் என்ற கனவோடு 8- ஆம் வகுப்பில் கல்வி பயின்றுவரும் தமிழ் செல்வி என்ற சிறுமி கிராம மக்களிடம் உள்ள கற்கால நம்பிக்கைகள் மற்றும் பழக்க வழக்கங்களை தகர்த்தெறிந்து மருத்துவராக வேண்டும் என்ற தனது இலக்கை அடைய அனைத்து முரண்பாடுகளுக்கும் எதிராக போராடுகிறார்.



அயலி இருப்பினும், வீரப்பன்னை கிராமத்தைச் சேர்ந்த இதர சிறுமிகளின் வாழ்க்கையில் ஒளி வீசச்செய்து ஒரு வழிகாட்டியாக திகழ்வதில் அவர் வெற்றி பெறுவாரா? என்பதை மையமாக வைத்து உருவாகியுள்ள இந்த தொடர் (ஜனவரி 26) ஜீ5 ஓடிடி தளத்தில் வெளியானது.

அயலி பெரும் எதிர்பார்ப்பில் வெளியான இந்த வெப் தொடர் திரையுலகினர், சினிமா விமர்சகர்கள், ரசிகர்கள் என பலரின் பாராட்டுக்களை பெற்று வருகிறது.

பெண் பிள்ளைகளின் கனவை சமூக அக்கறையோடு காட்சிப்படுத்தி அனைவரின் கவனத்தையும் இயக்குனர் முத்துக்குமார் ஈர்த்துள்ளார்.

இந்த தொடரை நடிகர்கள் துல்கர் சல்மான், விஜய் சேதுபதி, இயக்குனர்கள் வெங்கட் பிரபு, மித்ரன் ஆர் ஜவஹர், பிரசாந்த் உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் சமூக வலைத்தளத்தில் பாராட்டி வருகின்றனர்.

## துணிவு படத்தில் வந்த டிக்டாக் பிரபலம் டான்சர் ரமேஷ் தற்கொலை

டிக்டாக் மற்றும் சமூக வலைதளம் மூலம் பிரபலம் அடைந்தவர் டான்சர் ரமேஷ். இவர் தனியார் தொலைகாட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தார். தொலைகாட்சி நிகழ்ச்சி மட்டுமின்றி தமிழ் திரைப்படங்களிலும் நடனம் ஆடி இருக்கிறார்.

சமீபத்தில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்ற அஜித்-இன் துணிவு படத்தில் நடனம் ஆடி இருக்கிறார். முன்னதாக தமிழ் சினிமா திரைப்படங்களில் நடனம் ஆடி வந்த டான்சர் ரமேஷ், ரஜினிகாந்த் உடனும் திரையில் நடனம் ஆடி இருக்கிறார்.

இது தவிர ரஜினி காந்த் நடிப்பில் உருவாகி வரும் ஜெயிலர் படத்திலும் நடனம் ஆடி இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில், டான்சர் ரமேஷ் சென்னை புளியந்தோப்பில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின் பத்தாவது மாடியில் இருந்து கீழே குதித்து தற்கொலை செய்துகொண்டார். இந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி இருக்கிறது.



## அதிகம் வசூல் செய்து முதலிடத்திற்கு துணிவு

துணிவு அஜித் நடிப்பில் இந்த பொங்கல் விருந்தாக திரைக்கு வந்த படம். இப்படம் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இந்நிலையில் துணிவு படம் தஞ்சாவூரில் உள்ள ஜிவி திரையரங்கில் வசூல் சாதனை நிகழ்த்தியுள்ளது.

38 வருடங்களில் அதிகம் வசூல் செய்து முதலிடத்திற்கு துணிவு வந்துள்ளது. அதோடு பொன்னியின் செல்வன், கே ஜி எப் 2 ஆகிய படங்களின் வசூலையும் முறியடித்துள்ளது.



# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

05



சமாதான உடன்படிக்கைக்கு முரணாக சிறிலங்கா செயற்பட்டுக்கொண்டு இருந்த போது தான் விடுதலைப்புலிகள் மாவிலாறு அணையை மூடுகின்றார்கள். போரினால் மட்டுமல்ல இயற்கை அனர்த்தமான ஆளிப்பேரலையால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கும் உதவுவதுக்கு முனையாத சிறிலங்கா அப்பாவி மக்கள் மீது கெடுபிடிகளை ஒரு பொற்கால நிலைபோன்று ஏற்படுத்திய நிலையில் தான் அதற்கு எதிராக விடுதலைப்புலிகள் மாவிலாறு அணை விவகாரத்தை கையிலெடுத்தார்கள். 2006 ஆம் ஆண்டு யூலை 22 ஆம் திகதி சிங்கள குடியேற்ற மக்களுக்கு செல்லும் தண்ணீருக்கான அணைகள் மூடப்பட்டன. இது மூடப்பட்டதும் இரு தரப்பினரும் சிலகாலம் சமரச நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஆனால் மக்களின் அடிப்படை பிரச்சனையை தீர்ப்பதற்கு கூட சிறிலங்கா இறங்கியோ இணங்கியோ வராத நிலையில் பிரச்சனை போர் நிறுத்த கண்காணிப்பு குழுவிற்கு செல்கிறது. இதன்போது ஏற்பட்ட இணக்கப்பாடுகளை அடுத்து மனிதாபிமான அடிப்படையில் அணையை திறந்துவிடுவதற்கு விடுதலைப்புலிகள் சம்மதிக்கின்றார்கள். ஆனால் பேச்சுக்கள் மூலம் அணையை திறப்பதற்கு மறுத்த படையினர் தாக்குதல் மூலம் அணையை திறப்பதாக அறிவித்துவிட்டு கடுமையான முன்னேற்ற தாக்குதல்களை நடத்த தொடங்கினர். இந்நிலையில் தான் படையினரின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தும்நோக்கத்துடன் திருகோணமலையில் விடுதலைப்புலிகள் பலத்தினை காட்டும் முகமாகவும் ஓகஸ்ட் மாத ஆரம்பத்தில் ஒரு வழிந்த தாக்குதலை மூதூர் பகுதியை இலக்கு வைத்து மேற்கொள்கிறார்கள்.

திருகோணமலையில் விடுதலைப்புலிகளின் பலத்தினை காட்டும் முகமான தாக்குதலாக இருக்க வேண்டும் எனக் கருதிய விடுதலைப்புலிகள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் இந்த தாக்குதலை நடத்துவதற்கு திட்டமிடுகிறார்கள். புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் இதற்கான தாக்குதல் திட்டத்தினை தளபதி சொர்ணம் வகுத்து கொடுத்தார் தாக்குதல் தரை வழியாகவும் கடல் வழியாகவும் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டது. தரைப்பகுதியில் வெளிகளினூடாக கடந்து சென்று கட்டைபறிச்சான் ஜி.பி.எஸ். படைமுகாமினை தாக்கி அழித்து அங்கிருந்து (45)ம் கட்டைபறிச்சான் படைமுகாம் சென்று தாக்குதல் நடத்துவது கடல்வழியாக மூதூர் இறங்குதுறை மீது தாக்குதல் நடத்தி மூதூர் நகரத்தை மீட்பது பின்பு அங்கிருந்துகொண்டு தம்பலகாமம் ஆலங்கேணி பகுதிகள் மீது தாக்குதல் நடத்தி மூதூரின் பிரதேசத்தை முற்றுமுழுதாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான திட்டம் தீட்டப்பட்டு இருந்தது. புலனாய்வு தகவல்களை கொண்டு இழப்புக்களை குறைத்து படையினருக்கு பெரும் அழிவை ஏற்படுத்தும் வகையில் தாக்குதல் திட்டம் மிக கவனமாக வகுக்கப்பட்டு இருந்தது.

எனினும் மூதூர் பிரதேசம் பெரிய பிரதேசம் தமிழ் முஸ்லிம் மக்கள் இணைந்து வாழுகின்ற பிரதேசமாக காணப்படுகிறது. இதில் முஸ்லிம் மக்கள் தாக்குதல் நடத்தும் இடங்களில் அதிகம் வசித்து வந்தார்கள். எனவே ஒரு வழிந்த தாக்குதல் திட்டமாக வடிவமைக்கப்பட்ட இந்த தாக்குதல் திட்டம் இறுதியில் ஒரு முறியடிப்பு தாக்குதல் திட்டமாக மாற்றப்பட்டது. ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக தாக்குதல் தொடங்குவதற்கு முன்னர் மூதூர் பிரதேசத்தில் உள்ள படைமுகாம்களில் இருந்து படையினர் எல்லோரும் அங்கிருந்து தப்பியோடிவிட்டார்கள். அருகில் குடியேற்றப்பட்டிருந்த மக்கள் கூட தாக்குதல் அச்சத்தால் அங்கிருந்து தப்பியோடிவிட்டார்கள். எனினும் மூதூரில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய படைமுகாம்கள் விடுதலைப்புலிகளால் தாக்கியளிக்கப்பட்டு படையினரின் இராணுவ தளபாட பொருட்கள் பெருமளவில் கைப்பற்றப்பட்டு இருந்தன.

மூதூர் பிரதேசம் விடுதலைப்புலிகளின் கைகளில் முழுமையாக வந்தடைந்தது. எனினும் மீட்கப்பட்ட இடங்களை தக்கவைப்பது என்பது கேள்விக்குரிய விடயமாகிறது. அதாவது விடுதலைப்புலிகளின் கைகளுக்குள் இலகுவாக விழுந்த பரந்த பிரதேசத்தில் அரண் அமைத்து தக்கவைப்பதற்கு காலம் மட்டுமல்ல போராளிகளும் போதாமல் இருந்தனர். அதிக இழப்புக்களும் அழிவுகளும் இன்றி மிக இலகுவாக வெற்றி கொள்ளப்பட்ட பிரதேசத்தை தக்கவைக்க முடியாமல் போராளிகள் தங்கள் பழைய நிலைகளுக்கு திரும்பவேண்டிய இரு இக்கட்டான நிலை எழுந்தது. அதேவேளை இராணுவ முன்னேற்றங்களுக்கு கருத்து கூறாத சர்வதேச நாடுகள் விடுதலைப்புலிகள் ஒப்பந்தத்தை மதித்து தமது பழைய நிலைகளுக்கு திரும்ப வேண்டும் என வலியுறுத்த தொடங்கியிருந்தார்கள். இந்த நிலையில் போராளிகள் மீண்டும் பழைய நிலைகளுக்கு திரும்பினர். மீண்டும் அந்த பிரதேசங்களை ஆக்கிரமித்தது சிறிலங்கா இராணுவம் இந்த ஆக்கிரமிப்பின் போது அங்கு தங்கியிருந்த மக்கள் பலரை படுகொலை செய்தது. இதில் குறிப்பாக பிரான்சின் பட்டினிக்கு எதிரான அமைப்பின் பணியாளர்கள் 17 பேர் மிககொடூரமாக படுகொலை செய்யப்பட்ட கொடுமை அரங்கேறியது. இதற்கிடையில் மாவிலாற்றைத் திறப்பதற்கு பொதுமக்கள் மீதான பொருளாதார தடைகளை நீக்குமாறு போர்நிறுத்த கண்காணிப்புக்குழு ஊடாக சில தமிழ் தலைவர்கள் சமரச முயற்சியில் ஈடுபடுகின்றார்கள்.



இதில் திருகோணமலை மாவட்ட மக்கள் பேரவை தலைவராக இருந்து பின்பு சிறிலங்கா துணை இராணுவ ஒட்டுக்குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மாமனிதர் விக்னேஸ்வரன் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் ஆகியோர் சிங்கள அதிகாரிகளுடனும்சிங்கள தலைவர்களுடனும் கதைத்து இணக்கப்பாட்டை ஏற்படுத்த முனைகின்றார்கள். அதிலும் எதுவித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை இதேவேளை மாவிலாற்று அணை விவகாரம் தொடர்பாக விடுதலைப்புலிகளுக்கும் சர்வதேச போர்நிறுத்த கண்காணிப்பு குழுவினருக்கும் இடையிலான பேச்சுக்களின் முடிவில் மனிதாபிமான அடிப்படையில் நீரை திறந்து விடுவதற்கு விடுதலைப்புலிகள் முடிவு செய்கின்றார்கள்.

இதனடிப்படையில் 06.08.2006 அன்று அணையை திறப்பதற்காக சென்ற திருகோணமலைமாவட்டத்தின் அரசியல்துறை பொறுப்பாளர் எழிலனும் சர்வதேச கண்காணிப்பு குழுவினரும் சிறிலங்கா படையினரின் கடுமையான எறிகணை தாக்குதலுக்குள் இலக்காகின்றார்கள். எழிலனும் கண்காணிப்பு குழுவினரும் மயிரிழையில் உயிர்தப்புகின்றனர். பின்னர் 08.08.2006 மாலை ஐந்து மணிக்கு அணை திறந்துவிடப்பட்டது. எனினும் தமது போர் நடவடிக்கையை கைவிடாத சிறிலங்கா அரசாங்கம் அணையை ஆக்கிரமிப்பு நோக்குடன் மாவிலாறு நோக்கி மறுநாள் ஒன்பதாம் திகதி நகர்வை மேற்கொண்டனர். அந்த நகர்வு விடுதலைப்புலிகளால் கடும் தாக்குதல் மூலம் முறியடிக்கப்பட்டதையடுத்து மறுநாள் பத்தாம் திகதியும் பெரும் எடுப்பில் படை நடவடிக்கையை மேற்கொண்டனர். இதன்போது நாற்பதுக்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதுடன் மேலும் பல மதயினர் படுகாயங்களுக்கு உள்ளாகினார்கள். இந்த முயற்சி தோல்வியடைந்ததையடுத்து கடுமையான விமானத்தாக்குதல்களை தொடங்கிய படையினர் அணைக்கட்டை தாக்கியழிக்கும் நோக்குடன் அதனை இலக்கு வைத்தும் கடுமையான விமானத்தாக்குதலை நடத்தினர். இதற்கு பதிலடியாக 12ஆம் திகதி விடுதலைப்புலிகளின் கிட்டு பீரங்கி படையினர் திருகோணமலை துறைமுகம் மீது கடுமையான ஆட்டிலெறி தாக்குதலை நடத்தியது எனினும் தரைவழியாக முன்னேற படையினர் முனைந்தனர். இவர்கள் மீது விடுதலைப்புலிகளின் அணிகள் சிறப்பாக தாக்குதல் நடத்துகின்றார்கள். காட்டு பகுதியில் பொறிவெடி மிதிவெடி என்பனவற்றில் படைகள் சிக்கி பெரும் இழப்புக்களை சந்திக்கின்றார்கள். திருகோணமலையில் படையினருக்கு ஏற்பட்டுவந்த தொடர்ச்சியான பேரிழப்பு விடுதலைப்புலிகளின் பலம் குறித்து அச்சத்தை இராணுவத்தினர் மத்தியில் ஏற்படுத்துகின்றது. சில குறுகிய காலத்தில் பல படைமுகாம்களை தாக்கியளித்து விடுதலைப்புலிகள் மிகவேகமாக முன்னேறியது படையினருக்கு எதிர்காலத்தில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தும் என்பதை சிங்கள தரப்பிற்கு உணர்த்தியது. கருணாவின் பிரிவும் சமாதான காலமும் விடுதலைப்புலிகளின் பலத்தை பெருமளவு குறைவடைய வைத்திருக்கும் என்று நம்பிய படையினருக்கு மட்டுமல்ல சிங்கள அரச தலைமைக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதுவே திருகோணமலையில் இருந்து விடுதலைப்புலிகளை அகற்றவேண்டும் என்ற எண்ணத்தை சிங்கள தலைமையான மகிந்தவின் ஆழ் மனதில் உருவாக்கியது எனலாம். இத்தாக்குதலை தொடர்ந்து திருகோணமலையில் சிறிலங்கா கடற்படையின் மிதக்கும் மினிமுகாம் எனப்படும் அரசின் டோரா கலங்கள் விடுதலைப்புலிகளின் கடற்புலிகளால் தாக்கியழிக்கப்படுகின்றன. திருகோணமலை துறைமுகத்தின் நிலை கேள்விக்குள்ளாகின்றது இது பன்னாட்டு வணிக நடவடிக்கையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. அதாவது திருகோணமலைக்கு வரும் வணிக கப்பல்கள் அங்குவர மறுக்கின்றன. இது சிறிலங்கா அரசிற்கு பெரும் சிக்கலை உண்டாக்கியது குறிப்பிட்டு கூறுவதானால் துறைமுகம் சிறிலங்கா இராணுவத்தின் கைகளில் இருந்தாலும் திருகோணமலையின் கடல் கடற்புலிகளின் ஆதிக்கத்தில் இருக்கிறது என்பது உறுதியாகிறது. இது சிறிலங்காவினை விட அருகில் உள்ள இந்தியாவிற்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.

தொடரும்...

# ஊடகவியலாளர் சிவராமின் கொலையில் தொடர்புடைய கட்சியே DT.N.A

**ஓய்வுபெற்ற முன்னாள் நீதியரசரும், முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்**

கடந்தவார தொடர்ச்சி...

**கேள்வி : ஆர் ஆர் என்பவர் அல்லது ராகவன் என்றழைக்கப்படுபவர் அவருடைய கட்சி தான் என்பதை நீங்கள் முற்கூட்டியே அறிந்திருந்தீர்களா? அல்லது அதன் பிற்பாடு தான் அறிந்து கொண்டீர்களா?**

பதில் : ஆர் ஆர் என்பது எனக்கு யார் என்றே தெரியாது. அது ஆர்ஆர் என்று மாத்திரம் எனக்கு சொல்லப்பட்டது அது யாரோ ஒருவரின் பெயர் என்று மட்டும் தெரியும். இவர் தான் தராக்கி சிவராமின் கொலையுடன் சம்மந்தப்பட்டவர் என்று பலரும் கூறியிருந்திருக்கிறார்கள். என்னுடைய பொலிஸாரிடமிருந்தும் தகவல்கள் கிடைத்தது.


எனவே இப்படியெல்லாம் தகவல்கள் கிடைத்ததன் பின்னர் அவரை கொண்டுள்ள கட்சியில் நாங்கள் தேர்தலுக்காக பயணிப்பது என்பது அவ்வளவு நல்லதல்ல. நாளை அனைவரும் சொல்வார்கள் இவருடைய கட்சியில் தான் இவர்கள் போகின்றார்கள் என்று எனவே இது கூடாது ஒன்று. இரண்டாவது அவர் அதில் இருக்கும் பொழுது நாங்கள் யாருடைய பெயர்களை குறிப்பிடுகின்றோம் யார் தேர்தலிலே வென்றார்கள் என்பதை வெளியில் அறிவிப்பது போன்ற பல விடயங்களையும் அவரினூடாகத்தான் செய்யப்போகின்றார்கள். அவர் எப்படிப்பட்ட நடவடிக்கையில் ஈடுபடப்போகின்றார் என்பது எங்களுக்கு தெரியாது. மற்றும் ஜனநாயக போராளிகள் என்று கூறப்படுபவர்கள் வேறு இந்த ஐந்து கட்சிகளினதும் தலைவர்கள் வேறு. ஏனென்றால் என்னையும் சேர்த்து இந்த ஐந்து கட்சிகளின் தலைவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள். மூன்று பேர் தற்பொழுதும் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். மற்றவர்கள் முன்னர் இருந்திருக்கின்றார்கள்.

ஆகவே இந்த பாராளுமன்ற உறுப்பினர்களுடன் எனக்கு தொடர்பு எதுவும் இருக்கவில்லை. ஒரு வருடத்திற்கு முன்னர் அவர்களுடன் சேர்ந்து நாங்கள் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்திருக்கின்றோம். அவ்வாறிருக்க எனக்கு பரீட்சியமில்லாத ஒரு கட்சியை கொண்டு வந்து அவர்களையும் சேர்த்துக்கொள்வது ஒரு பிரச்சனையாக எனக்கு இருந்தது. மூன்றாவதாக என்னுடைய கட்சியை ஏற்றுக்கொள்ள முடியாது. கட்சியின் சின்னத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றால் என்மீதும் அவர்களுக்கு சந்தேகம் இருப்பதாகத்தான் அர்த்தம். எனவே என்மீது நம்பிக்கையில்லாத ஒரு இடத்திலே நான் எப்படி அதிலே தலைவராக இருக்கமுடியும்.

**கேள்வி : தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைப் போன்ற அதிகாரமிக்கவராக எதுவும் செய்வதாகத்தானே உங்கள் மீது குற்றம் சாட்டுகின்றார்கள்?**

பதில் : செயற்பட முடியும் என்று சொன்னார்களே தவிர அதாவது என்னுடைய கட்சி சொன்னது வேறு இது வேறு. இந்த ஐந்து கட்சிகளையும் நான் எந்த விதத்திலும் அவ்வாறு நடத்தவில்லை. ஆனால் என்னை கொண்டு வந்து எனக்கு தலைமைத்துவம் தருவதாக கூறிவிட்டு என்னுடைய கட்சியையும் கட்சியின் சின்னத்தையும் அவர்கள் தராதுவிடுவது என்மீது அவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்பது தான் என்னுடைய வாதம். என்னை நம்பாதவர்களுக்கு நான் எப்படி தலைமைத்துவத்தை கொடுப்பது. அடுத்தது தற்பொழுது இவர்களை கூட்டிக்கொண்டு வந்தது போன்று ஜனநாயகப் போராளிகளை வேறு எதைஎதையோ மற்றவர்கள் செய்யும் பொழுது நான் தலைவர் என்ற முறையிலே பொறுப்பாக இருப்பேன்.

ஆகவே தமிழர்களின் ஒற்றுமைக்கு எதிராக நான் செயற்படுகின்றேன் என்றால் இல்லை இவ்வாறான ஒரு கூட்டத்தை ஒருங்கிணைத்து அதற்கு தலைமை வகிக்கும்பொழுது அதிலே ஒற்றுமையில்லை பிரிவினைகள் தான் நடக்கப்போகின்றன.



**கேள்வி : இதிலே ஜனநாயக போராளிகள் என்பது விடுதலைப்புலிகளில் இருந்தவர்கள் தான் இன்று விடுதலைப்புலிகள் இல்லை என்னும்பொழுது கருணா பிள்ளையான் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி ஜனநாயக போராளிகள் என விடுதலைப்புலிகளில் இருந்தவர்கள் தான் இன்று இந்த கட்சிகளை ஆரம்பித்திருக்கின்றார்கள். இதிலே உங்களுக்கு சந்தேகம் இருக்கின்றதா?**

பதில் : இவர்கள் எல்லாருமே அரசாங்கத்துடன் தொடர்புடையவர்கள். பொலிசாரின் ஊடாக நான் பெற்ற செய்திகள் இவர்கள் அனைவரும் அரசாங்கத்துடன் தொடர்புடையவர்கள். அரசாங்கத்தால் நடாத்தப்படுபவர்கள். பிள்ளையானும் அப்படித்தான். கருணாவும் அப்படித்தான். இவர்களும் அப்படித்தான் என்பது தான் எனக்கு தரப்பட்ட செய்தி. எனவே அது ஒருபுறமிருக்க புலிகள் அந்த தம்பிமார்கள் அதில் வந்து சேர்வதில் எனக்கு எந்தவிதமான ஆச்சரியமும் இல்லை. ஆனால் இவர்கள் எவ்வாறான பின்புலத்திலிருந்து வருகின்றார்கள் எதை முன்னோக்கி வருகின்றார்கள். அரசாங்கத்தினுடைய சம்மந்தம் என்னமாதிரி என பலதையும் நான் அறியாமல் அவர்களை உள்ளடுக்க முடியாது என்பதால் தான் முதலிலே இந்த ஐந்து கட்சிகளும் சேர்ந்தும் அதன் பின்னர் அவர்களைப் பற்றி நாங்கள் விசாரித்து அறிந்ததன் பிற்பாடு அவர்களை உள்ளேற்றலாம் என்று தான் இருந்தேன்.

**கேள்வி : நீங்கள் நீதியரசராக இருந்தவர் என்ற வகையிலே சட்ட ரீதியாக பார்க்கின்றபொழுது தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த நாட்டில் இயங்குவதற்கு தடை செய்யப்பட்டிருக்கின்றார்கள். பயங்கரவாத தடைச்சட்டம் இன்னும் அமுலில் இருக்க இந்த விடுதலைப்புலிகளின் பெயரை வைத்துக்கொண்டு அல்லது நாங்கள் விடுதலைப்புலிகளுக்காக இன்னமும் குரல் கொடுக்கின்றோம் என ஒரு கட்சி ஆரம்பிக்கப்படுமாக இருந்தால் அது சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படுமா?**

பதில் : நான் நினைக்கவில்லை அவர்கள் விடுதலைப்புலிகள் என தங்களை அடையாளப்படுத்தினார்கள் என்று. அவர்கள் ஒன்று புனர்வாழ்வு பெற்றவர்கள் இரண்டாவது விடயம் அவர்கள் தங்களை ஜனநாயக போராளிகள் என்று தான் அழைத்தார்களே தவிர விடுதலைப்புலிகள் என்று கூறவில்லை. ஆனால் பிள்ளையான் அவர்கள் தான் விடுதலைப்புலிகள் தான் என்ற பெயரை வைத்துக்கொண்டு தான் இருக்கின்றார்.

**கேள்வி : அதிலிருந்து வந்தவர்களை அரசியல் நடவடிக்கைகளுக்காக ஒரு அரசாங்கம் அங்கீகரித்திருக்கின்றது என்றால் இந்த டயஸ்போராக்களை அங்கீகரிக்க முடியும் என்றவொரு கேள்வி எழுப்பப்படுகின்றதே?**

பதில்: அது உண்மை. அதாவது உண்மையிலே இவர்கள் புலிகளுடன் சம்மந்தப்பட்டவர்கள் இங்கு வந்து அவர்களுக்கு அரசாங்கம் ஒரு அடையாளத்தை கொடுத்தார்கள் என்றால் வெளியில் இருப்பவர்கள் அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் புலிகளை தடை செய்துவிட்டு சிலருக்கு அரசாங்கம் ஒரு அடையாளத்தை கொடுத்து அவர்களை ஏற்றுக்கொள்வார்களேயானால் இவர்களுக்கும் அவர்களுக்கும் என்ன சம்மந்தம் என்ற கேள்வி எழும்பியிருக்கின்றது அதுதான் பிரச்சனை.

**கேள்வி : நீங்கள் ஆயுதம் தாங்கிய வன்முறையாளர்களுடன் என்னால் பயணிக்க முடியாது நான் ஒரு ஜனநாயகத்தின் ஊடாக வந்தவன் என பல தடவைகள் பல இடங்களில் கூறியிருப்பதாககூட உங்கள் மீது குற்றச்சாட்டுக்கள் ஊடகங்கள் மூலமாக முன்வந்திருக்கின்றது. அதாவது ஆயுதம் தாங்கியவர்கள் என்று பார்த்தால் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற அனைத்துமே ஆயும் ஏந்திய கட்சிகள் தான் அதனுடன் இணைந்திருக்கும் இந்த ஜனநாயக போராளிகளும் இருக்கின்றார்கள். குறிப்பாக ஜனநாயக போராளிகள் அவர்களுக்கான அங்கீகாரம் எந்த வகையில் இருக்கின்றது என்பது உங்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியதாகவும் குறிப்பிட்டிருந்தீர்கள். அதனடிப்படையில் டயஸ்போராக்களை இங்கு அவர்களின் நடவடிக்கைகளை செய்வதற்கு அனுமதிக்காத இந்த இலங்கை அரசாங்கம் இவர்களை எவ்வாறு அனுமதித்தது என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. அதே நேரத்தில் நீங்கள் வன்முறையாளர்கள் என்று குறிப்பிட்டு கூறிய விடயத்திலே ரெலோ புளொட் ஈ.பி.ஆர்.எல்.எப் எல்லோருமே அடங்குவார்கள். அப்படியெனில் இந்த விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்துவந்தவர்களை இணைத்து ஏன் செயற்படுத்தக்கூடாது என்ற நிலையை நீங்கள் ஏற்படுத்தவில்லை?**

பதில் : அதைத்தான் நான் ஏற்கனவே கூறினேன். மற்றைய கட்சிகள் சரியோ பிழையோ மக்களால் பாராளுமன்றத்திற்கு அனுப்பியிருக்கின்றார்கள் அதனுடைய தலைவர்கள் அவர்களுடன் தொடர்பில் இருந்திருக்கின்றனர்.

அந்த நிலையில் அவர்களுடன் சேர்ந்து பயணிக்க முடியுமாக இருந்தது. ஆனால் இவர்கள் அவ்வாறல்ல இவர்கள் புனர்வாழ்வு கொடுக்கப்பட்டு வந்தவர்கள். எந்தளவிற்கு அவர்கள் உண்மையான புலிகளா?. அல்லது அவர்களுடன் சம்மந்தப்பட்டவர்கள்?. அரசாங்கத்தினுடைய ஏவலிலே இதனுள் நுழைகின்றார்களா என பல கேள்விகள் எனக்கு இருந்தது. அது ஒன்றையும் அவர்கள் எனக்கு விளக்கப்படுத்தி கூறவில்லை. அந்த நிலையில் இவர்களை நான் ஏற்றுக்கொள்வதாயின் முதலில் ஐந்து கட்சிகள் சேர வேண்டும். அதன் பின்னர் அவர்கள் சம்மந்தமாக முழு விபரங்களையும் எடுத்ததன் பிற்பாடு அவர்களை நான் உள்ளே கொண்டுவரலாம் போராளிகளை உள்ளே கொண்டுவருவதில் எனக்கு எந்தவிதமான பிரச்சனையும் இல்லை என்று கூறினேன்.

**கேள்வி : நீங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளை நிராகரித்துவிட்டீர்கள் என்ற செய்தி வந்ததே ஊடகங்களிலே?**

பதில் : அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளா என்பது எனக்கு தெரியாது. அவர்கள் தங்களை ஜனநாயகப் போராளிகள் என்று தான் கூறிக்கொண்டுவந்தார்கள். எனவே அவர்கள் ஜனநாயக போராளிகள் என்றால் போராளிகளாக இருந்து ஜனநாயக முறைக்கு வந்ததாகவும். புனர்வாழ்வு பெற்று வந்ததாகவும் எனக்கு கூறப்பட்டது. எனவே அவர்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் எந்தவிதமான தொடர்பு இருந்தது என்பது சம்பந்தமான முழு விபரங்களும் எனக்கு தெரியாது.

**கேள்வி : தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்துவந்தவர்களை நீங்கள் ஏதாவது ஒரு ஒப்பந்த அடிப்படையில் தான் நீங்கள் அவரை கையாண்டிருக்க வேண்டும். முற்கூட்டியே நீங்கள் இந்த திட்டங்களை செய்யவில்லையா?**

பதில் : ஏற்கனவே பாராளுமன்றத்தில் இருந்தவர்களை நான் கேள்வி கேற்க விரும்பவில்லை. அவர்கள் பாராளுமன்றத்திலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அந்த விதத்திலே நான் கேள்விகளை கேட்கவில்லை. இவர்கள் அப்படிப்பட்டவர்கள் இல்லை எனவே கேள்வி கேட்க வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு இருந்தது.

**கேள்வி : தமிழரசுக் கட்சி உங்களை ஏற்கனவே அதிலிருந்து விலக்கியது அல்லது நீங்கள் விலகிக்கொண்டீர்கள் அதுபோன்று தற்பொழுது நடைபெற்ற பிரச்சனைகளில் புளொட்டும் ரெலோவும் இறுதியாக தமிழரசுக் கட்சியில் இருந்தது. அதில் இடைத்தலைவராக செல்வம் அடைக்கலநாதனும் இருக்கின்றார், சித்தார்த்தனும் அதிலே இருக்கின்றார். எனவே இந்த நிலையிலே தற்பொழுது தொடர்ந்தும் இந்த கூட்டு தேர்தலுக்காகவா உருவாக்கப்பட்டது என்ற கேள்வி இருக்கின்றதல்லவா?**

பதில் : தேர்தலுக்காக அல்ல நாங்கள் தமிழ் மக்களினுடைய விடுதலைக்காக நாங்கள் இணைகின்றோம் என்ற முறையில் தான் தொடங்கினாங்கள். ஆனால் இந்த தேர்தல் சம்பந்தமான விடயங்கள் வந்தது அந்த கட்சியை எங்கள் மீது திணிக்கத் தொடங்கியபோதாகும்.

அதாவது DTNA என. அதை திணிக்க போகும் பொழுது தான் அதனுடைய செயலாளர் யார் அது எந்த கட்சியுடன் சம்பந்தப்பட்டது அதனுடைய சின்னம் என்ன என்பது சம்பந்தமாக ஆராயவேண்டி வந்தது. அந்த நேரத்திலே நான் கேட்ட விடயம் என்னவென்றால் எங்களது கட்சி பதிவு செய்யப்பட்டிருக்கின்றது அதற்குரிய சின்னம் இருக்கின்றது என்னை நீங்கள் தலைவராக்கப்போவதாக இருந்தால் அதனை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று.

அப்படி செய்யமுடியாது என அதற்கு அவர்கள் சொன்னார்கள் என்னவென்றால் தமிழரசுக் கட்சி ஏற்கனவே தன்னுடைய சின்னத்தையும் கட்சியையும் வைத்துக்கொண்டிருந்தே இவர்களை தள்ளிவிட்டபடியால் நாங்களும் அதேமாதிரி செய்யக்கூடும் என்றவாறு அவர்கள் பேசினார்கள். அப்படி என்மீது அந்தளவிற்கு நம்பிக்கை இல்லையென்று சொன்னால் நான் எப்படி அதில் தலைவராக இருக்க முடியும். ஆகவே நான் போய்வாரேன் என்று சொல்லியாச்சு.

**தொடரும்...**
**நேர்காணல் : இரணியன்**

# மகளிர் பக்கம்



## பாதங்களை அழகாக்கும் சில எளிய டிப்ஸ்...!

கரடு முரடான சாலைகளில் செல்லும் போது காலணி முக்கியம். அப்படி அணியவில்லை என்றால் சாலைகளில் உள்ள ஜல்லி கற்கள், உடைந்த கண்ணாடி துகள்கள், முற்கள் உங்கள் பாதங்களில் எளிதாகக் காயத்தை ஏற்படுத்தும். செருப்பு இல்லாமல் நடப்பதை அறவே தவிருங்கள்.

வாரத்திற்கு ஒரு முறை உங்கள் நகங்களை வெட்டிப் பாதங்களை மிகத் தூய்மையாகவும், நகங்களின் கீழ்ப்பகுதியை அழுக்கு அண்டாமலும் பார்த்து கொள்வது அவசியம். அப்படி செய்யவில்லை என்றால் புண்கள் மற்றும் நகங்கள் சொத்தையாக வழிவகுக்கும்.

மிக நீண்டதாக வளரும் நகங்கள் உள்நோக்கி வளரலாம் மற்றும் உங்கள் பாதங்களை பதம் பார்த்துக் காயங்களை ஏற்படுத்தும். நகங்களை வெட்டும் முன் கால்களை சிறிது தண்ணீரில் கழுவி விட்டு சிறுது நேரம் கழித்து வெட்டும் போது நகங்கள் காயங்கள் ஏதும் ஏற்படாமல் எளிதாகத் துண்டிக்கலாம்.

படுக்கைக்கு செல்லும் முன்போ அல்லது காலை படுக்கையில் இருந்து எழுந்ததும் சிறிது நேரம் உங்கள் பாதங்களை மிதமான வெந்நீரில் கழுவி உங்களின் பாதத்திற்கு ரத்த ஓட்டத்தை அதிகப்படுத்துங்கள்.

பாதத்தில் வெடிப்பு உள்ளவர்கள் வீட்டில் மருதாணி இலையை விழுது போல நன்கு அரைத்து வெடிப்பு உள்ள இடங்களில் வாரந்தோறும் தடவி வந்தால் வெடிப்பு நீங்கும். உருளைக்கிழங்கை காய வைத்து அதனை மாவு போன்று அரைத்து தண்ணீரில் குழைத்து பூசி வர வெடிப்பினால் ஏற்பட்ட கருமை நீங்கி, பாதம் மிளிரும்.

நீங்கள் காலணி அணிபவரா, அப்படியானால் சாயம் கலந்த செயற்கை நூலினால் செய்யப்பட்ட கால் உறைகளைத் தவிர்த்து, காட்டன் கால் உறைகளை உபயோகியுங்கள். காலணிகளை அணியும் முன் உள்ளே ஏதும் கூரான குப்பைகள் இருக்கிறதா என்று பரிசோதித்த பின் அணியுங்கள்.

இளஞ்சூடான நீரில் பாதங்களை சிறிது நேரம் வைத்திருந்து, பீர்க்கங்காய் நார் கொண்டு பாதங்களை நன்றாகத் தேய்த்துக் குளிப்பதால் பாதங்கள் மிருதுவாக மாறும். பாதங்களை எலுமிச்சைப் பழத்தோலால் ஒரு நாள் விட்டு ஒரு நாள் நன்றாகத் தேய்த்து வர பாத வெடிப்பு குணமாகும்.

மருதாணியை அரைத்து பாத வெடிப்பு அதிமாக இருக்கும் இடத்தில் பூசி வந்தால் பாதவெடிப்புகள் குணமாகும். நல்ல காற்றோட்டம் உள்ள செருப்புக்களையும், காலணிகளையும் அணியுங்கள், இது உங்களின் கால்களில் புண்களை ஏற்படுத்தாமல் தவிர்க்க ஒரு சிறந்த வழி முறையாகும்.



## இயற்கை மருத்துவ குறிப்புகள்

நாம் நோயின்றி வாழ்வதற்கு அவசியமான எளிய இயற்கை மருத்துவ குறிப்புக்களை பற்றி இங்கு பார்ப்போம்.

நீர்ச்சுருக்கு வெயில் காலத்தில் முக்கியமாக பெண்களுக்கு நீர்க்கடுப்பு ஏற்படுகிறது. இதற்கு காரணம் வெயில் காலத்தில் அதிகமாகத் தண்ணீர் குடிக்காமல் இருந்தால் நீர்ச்சுருக்கு ஏற்படும். தாராளமாகத் தண்ணீர் குடிக்க வேண்டும். பார்லி அரிசி ஒரு கைப்பிடி எடுத்து 8 டம்ளர் தண்ணீரில் கொதிக்க வைத்து ஆறிய பிறகு குடிப்பது நல்லது. இளநீரில் வெந்தயப் பொடி கலந்து குடிக்கலாம்.

அரிசியுடன் வெந்தயத்தைச் சேர்த்து கஞ்சியாக்கி காய்ச்சி உண்டு வந்தால் தாய்ப்பால் சுரக்கும்.

கர்ப்பிணிப் பெண்கள் அடிக்கடி இளநீர், தர்ப்பூசணி பழம் ஆகியவை சாப்பிட்டால் குழந்தை சுகமாகப் பிறக்கும். அழகாகவும் இருக்கும்.

நெருப்பு சுடுநீர் பட்ட இடத்தில் பெருங்காயத்தை அரைத்துப் பூசினால் எரிச்சல் குறையும் கொப்பளமும் ஏற்படாது.

கேரட் சாறும் சிறிது தேனும் கலந்து பருகி வர கர்ப்பிணி பெண்கள் வாந்தி நிற்கும் உடல் வலுவாகும்.

பித்த நோய்கள் தீரும். நெருப்பில் சுட்ட வெங்காயத்தை சாப்பிட்டு வர இருமல் கபக்கட்டு முதலியன நீங்கும்.

நெற்றியில் குங்குமம் வைத்துப் புண்ணாகி உள்ள இடத்தில் வில்வமரத்துக் கட்டையுடன் சந்தனமும் சேர்த்து இழைத்துத் தடவி வந்தால், புண் குணமாகி விடும்.

இரவில் மூக்கடைப்புக்கு மின் விசிறியின் நேர் கீழே படுக்க வேண்டாம். சற்று உயரமான தலையணை பயன்படுத்தவும். மல்லாந்து படுக்கும் போது மூக்கடைப்பு அதிகமாகும்.

## மாதுளம் பழம் சாப்பிடுவதால் கிடைக்கும் பலன்கள்...!

மாதுளம் விதைகள் நம் தோல்களில் ஏற்படும் காயங்கள் மற்றும் தழும்புகளைக் குணமாக்கும் சக்திகொண்டவை. மாதுளம்பழச்சாறு தலைமுடியின் வேர்களை உறுதிப்படுத்தும். தலையில் ரத்த ஓட்டத்தைச் சீராக்கி, முடிவளர்ச்சியைத் தூண்டும். இதில் இருக்கும் விட்டமின் மற்றும் தனிமங்கள் முடியைப் பளபளப்பாகவும் அடர்த்தியாகவும் மாற்றுகின்றன.


தினமும் மாதுளம் சாப்பிட்டால், மூளையில் உள்ள நரம்பியல் கடத்திகள் இயற்கையாகவே தன் சக்திகளை அதிகரித்து, மூளையைச் சுறுசுறுப்பாக்கும் ஞாபகசக்தியை அதிகரிக்கச் செய்யும். அத்துடன் அல்சைமர் மற்றும் மூளைக் கட்டிகள் வராமல் தடுத்து பாதுகாக்கும்.

கர்ப்பிணிப் பெண்கள், தினமும் மாதுளம்பழச் சாறு குடித்துவர, குழந்தையின் மூளை வளர்ச்சி நன்றாக வளர துணைபுரியும். ஹார்மோன் குறைபாடுகள் நீங்கி, கர்ப்பப்பை ஆரோக்கியமாக இருக்கும்.

மாதுளை, வயிற்றில் குவிந்துள்ள தேவையற்றக் கொழுப்புகளை நீக்கும் தன்மை உடையது. செரிமானப் பிரச்னைகளைச் சீராக்கி, உடல் எடை குறைவதற்கும், டைப் 2 வகை சர்க்கரைநோயைக் குறைப்பதற்கும் துணைபுரியும்.

மெனோபாஸ் காலங்களில் ஈஸ்ட்ரோஜெனின் உற்பத்தி குறைந்து, மூட்டுவலி மற்றும் எலும்புத் தேய்மானம் அதிகரிக்கும். இது போன்ற காலங்களில் பெண்கள் தினமும் மாதுளம்பழ ஜூஸ் குடிக்கலாம். அது, உடலில் ஈஸ்ட்ரோஜென் உற்பத்தியைத் தூண்டும் எலும்புகள் வலுப்பெற உதவும்.

மாதுளம்பழத்தை உண்பதால், ஈறுகள் மற்றும் பற்களில் மறைந்திருக்கும் கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் அழிகின்றன. தினமும் 100 மி.லி மாதுளம்பழச் சாற்றை பருகிவந்தால், ரத்த நாளங்கள் தளர்வடைந்து, அதிக அளவில் ஆக்சிஜனைக்கொண்ட ரத்தம் இதயத்துக்குச் சென்று, இதயம் பலம் பெறும்.



## புன்னகை மாறாமல் காட்சி அளிக்கும் பெண்கள்

மகிழ்ச்சி தான் வாழ்க்கையை வசந்தமாக்கும் திறவுகோல். எந்த வேலையாகவும், சின்ன விஷயமாகவும் இருந்தாலும் கூட அதை ரசித்து சந்தோஷமாக செய்ய தொடங்க வேண்டும். அப்போதுதான் அந்த காரியங்களில் முழு கவனத்தையும் செலுத்த முடியும். இயல்பாகவே நகைச்சுவை உணர்வு கொண்டிருப்பவர்கள் எந்தவொரு விஷயத்தையும் சுலபமாக கையாண்டுவிடுவார்கள். பிரச்சினைகளை சந்திக்க நேர்ந்தாலும் சாதுரியமாக சமாளித்து விடுவார்கள். சட்டென்று மன நிம்மதியை இழக்க மாட்டார்கள். மகிழ்ச்சியை தக்கவைத்துக்கொள்வார்கள். மகிழ்ச்சியான மன நிலையில் இருப்பவர்களிடம் மன அழுத்தம் எட்டிப்பார்க்காது. அதனால் மகிழ்ச்சியான மனநிலையை தக்க வைப்பதை அன்றாட கடமையாகக் கொள்ள வேண்டும். எப்போதும் மன இறுக்கமாக இருப்பவர்களிடம் மகிழ்ச்சி ஒருபோதும் நிலைத்திருக்காது. அவர்களிடம் நெருங்கி பேசுவதற்கே பலரும் பயப்படுவார்கள். அதனால் அவர்களுடன் நட்புறவை பேணுபவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டிருக்கும்.

அலுவலகங்கள், பொது இடங்கள், உறவினர்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளில் அவர்களை தேடிச்சென்று நலம் விசாரிப்பவர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும். வீட்டில் கூட தனிமை சூழலுக்கு தள்ளப்படும் நிலை ஏற்பட்டுவிடும். அவர்களிடத்தில் குழந்தைகள் கூட சகஜமாக பேசுவதற்கு தயங்குவார்கள். பெண்களிடம் இயல்பாகவே நகைச்சுவை உணர்வு குடிகொண்டிருக்கும். எப்போதும் புன்னகை மாறாமல் காட்சி அளிக்கும் பெண்களின் வீடு எப்பொழுதும் கலகலப்பாக இருக்கும். அவர்களிடம் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் நெருங்கி பழகுவார்கள். அவர்களின் மனங்களில் மகிழ்ச்சி என்றும் நிலைத்திருக்கும். அத்தகைய சந்தோஷமான மனநிலையும், திருப்தி அடையும் மனப் பக்குவமுமே வாழ்க்கையை வசந்தமாக்கும். இத்தகைய எதார்த்தத்தை புறக்கணித்து விட்டு பலவிதமான எதிர்பார்ப்புகளுடன் வாழ்பவர்கள் எளிதில் மனக் குழப்பங்களுக்கு ஆளாகிறார்கள். மனக்கவலை, மனக்குழப்பம் இல்லாமல் இருந்தாலே மகிழ்ச்சி எட்டிப்பார்க்கும். சந்தோஷம்தான் வாழ்வின் அடிப்படை தேவை.

## அவல் பாயாசம் செய்முறை



**தேவையான பொருட்கள் :**

அவல் - 1/2 கப்
வெல்லம் - 1/4 கப்
பால் - 2 கப்
ஏலக்காய் - 1
நெய் - 2 தேக்கரண்டி
உப்பு - ஒரு சிட்டிகை

**செய்முறை:**

வாணலியில், நெய் ஊற்றி முதலில் முந்திரியை பொன்னிறமாக, மிதமான தீயில் வறுத்து தனியே எடுத்து வைக்கவும். அதே நெய்யில் அவலை போட்டு பொரிந்து லேசாகும் வரை வறுக்கவும். பாலை ஒரு கனமான பாத்திரத்தில் ஊற்றி காய்ச்சவும். பால் நன்றாக கொதித்து சுட்டி வரும் போது வறுத்த அவல், மற்றும் உப்பு சேர்த்து, மிதமான தீயில் பால் வற்றி, அவல் வேகும் வரை வைக்க வேண்டும்.

பின்னர் 1/2 கப் தண்ணீரில் வெல்லத்தை போட்டு சூடு செய்யவும். வெல்லம் கரைந்தவுடன், வடிகட்டி, வெந்த அவலில் சேர்த்து கலக்கவும். அத்துடன் ஏலக்காய், முந்திரி சேர்த்து கலந்து இறக்கவும். வெல்லம் சேர்த்த பிறகு, 1 நிமிடத்தில் பாயசத்தை இறக்கிவிடவும். கொதிக்க வைக்க வேண்டாம். இப்போது சூப்பரான அவல் பாயாசம் ரெடி.

குறிப்பு: அவல் நன்கு வெந்தவுடன் தான் வெல்லம் சேர்க்கவேண்டும். வெல்லம் சேர்த்த பின் அவல் வேகாது.

# ஜெனீவா தீர்மானங்கள், தமிழ் மக்களுக்கான தீர்வாக அமையப்பெறுமா?

கடந்தவார தொடர்ச்சி...

உண்மை, நீதி, ஈடுசெய்தல், மீள நிகழாமைக்கான உத்தரவாதம் பற்றிய விசேட பத்திரிகைச் செய்தியாளர்களினால் 2015 மார்ச் 30ஆந் திகதியிலிருந்து ஏப்ரல் 3ஆந் திகதி வரை செய்யப்பட்டுள்ள விஜயமும் அவதானிப்புக்களும் மற்றும் நவம்பர் மாதத்தில் நபர்களின் பலாத்காரமான காணாமல்போதல்கள் மற்றும் நபர்களின் தன்னிச்சையற்ற காணாமல் போதல்கள் பற்றிய தொழிற்படு தொகுதியின் திட்டமிடப்பட்ட விஜயமும் வரவேற்கப்படுகின்றன. பொறுப்புக்கூறலின் நம்பகத்தன்மை வாய்ந்த தேசிய நடைமுறையானது இல்லாமலிருந்த நிலைமையே 25/1 ஆம் இலக்க மனித உரிமை மன்றத் தீர்மானத்தில் கோரப்பட்ட இலங்கையில் இடம்பெற்றதாக குற்றம்சாட்டப்பட்ட பாரதூரமான வன்செயல்கள், மனித உரிமைகளின் துஷ்பிரயோகங்கள் மற்றும் இவை தொடர்பிலான குற்றங்களுக்கான விசாரணையை தேவைப்படுத்தியுள்ளன என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

தொழிற்பாட்டுப்பந்திகள்

1. மனித உரிமைகள் மன்றத்தின் இருபத்தேழாவது அமர்வில் மனித உரிமைகள் மன்றத்தின் உயர் ஆணையாளரினால் வாய்மொழி மூலமான இற்றை வரையாக்கப்பட்டதும் இலங்கையில் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் ஊக்குவிப்பதற்கான அவருடைய அலுவலகத்தின் அறிக்கை பாராட்டுதலுடன் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை மீதான உயர் ஆணையாளரின் அலுவலகத்தின் அறிக்கையின் 25/1 ஆம் தீர்மானமானது தனது காண்புகளையும் முடிவுரைகளையும் உள்ளடக்கியுள்ளதுடன் உண்மையைத் தேடுதல், நீதி, ஈடுசெய்தல்கள், மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதங்களை நடைமுறைப்படுத்தும் போது அதன் கண்ணுள்ள சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்திற்கு ஊக்குவிப்பு வழங்குகின்றது.

2. 2015 ஜனவரியிலிருந்து இலங்கை அரசாங்கத்திற்கும் உயர் ஆணையாளருக்கும் உயர் ஆணையாளரின் அலுவலகத்துடனும் சாதகமான தொடர்பு இருப்பதை வரவேற்கின்றதுடன் உண்மையையும் நீதியையும் தேடுவதற்கான இலங்கையின் நடைமுறைகளில் சர்வதேச ஆதரவின் இயைபுள்ள வடிவங்களைக் கண்டறிவதிலும் தொடர்ச்சியான ஈடுபாடு மேற்கொள்ளப்படுவதற்கு ஊக்குவிப்பு வழங்குகின்றது.

3. உண்மையைத் தேடுதல், நீதி, ஈடுசெய்தல், மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதங்கள் ஆகிய நடைமுறைகள் தொடர்பில் சர்வதேச நிபுணத்துவம் உதவி மற்றும் வடிவமைப்பு நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றைப் பற்றி அறிவிக்கும் சகல பாதிக்கப்பட்ட சமூகங்களிலிருந்தும் அரசாங்கம் சாராத அமைப்புக்களையும் உள்ளடக்கி பாதிக்கபட்டவர்களையும் சிவில் சமூக்தையும் உள்ளடக்கி பரந்த தேசிய கலந்துரையாடல்களில் ஈடுபடுவதன் மூலம் அவற்றைப் பலப்படுத்துவதையும் நம்பகத்தன்மையைப் பாதுகாப்பதற்குமான இலங்கையின் பொறுப்பிற்கு ஆதரவு வழங்குகின்றது.

4. நீதி மற்றும் நீதியல்லாத நடவடிக்கைகளின் முழுத்தொடரையும் கடந்த காலத்துடன் ஒன்றிணைத்து இதைக் கையாள்வதற்கான இலங்கை அரசாங்கத்தின் அகல் விரிவான அணுகுகையை இலங்கை அரசாங்கம் வரவேற்கின்றது. இத்தொடர்பில் உண்மை, நீதி, நல்லிணக்கம், மீள்நிகழாமை, ஓர் காணாமல்போனோர்கள் அலுவலகம், ஓர் ஈடுசெய்தலுக்கான அலுவலகம் ஆகியவற்றை நிறுவுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் முன்மொழிவை வரவேற்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகத்தையும் உள்ளடக்கி நிதி, பொருள் மற்றும் தொழினுட்ப உதவிகளை மனித உரிமை உயர் ஆணையாளரின் அலுவலகத்தையும் உள்ளடக்கி சர்வதேச பங்காளர்களின் உதியைப் பெறும் சுதந்திரத்தை வழங்கும் பொறிமுறையொன்றை இவை ஒவ்வொன்றுக்கும் வழங்குவதற்கான அரசாங்கத்தின் விருப்பத்தை வரவேற்கின்றது. அத்துடன் இது இந்த பொறுப்புகள் முழுமையாகவும் நம்பகத்தன்மையுடனும் நடைமுறைப்படுத்துமிடத்து இது சகல தரப்பினர்களினதும் பாரதூரமான குற்றங்களுக்குமான பொறுப்புக்கூறலை முன்னேற்றிக் கொண்டு செல்வதற்கு உதவுமென்பதுடன் நல்லிணக்கம் எய்தப்படுவதற்கும் உதவும்.

5. இலங்கை மீதான விசாரணை அறிக்கையில் துலாம்பரமாகக் காண்பிக்கப்பட்டுள்ளதன் படி தமிழீழ விடுதலைப் புலிகளினால் புரியப்பட்ட வன் செயல்களுக்கும் துஷ்பிரயோகங்களுக்குமான பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க நடைமுறையொன்றுக்கான தேவையை ஏற்றுகின்றது.

6. நீதித்துறைக்குற்பட்ட சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும், அனைத்து சமூகங்களை கொண்ட இலங்கை மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டி எழுப்பும், பொறுப்பு கூறலுக்கு இலங்கை அரசு வழங்கியிருக்கும் அங்கீகாரம் வரவேற்கப்படுகின்றது. புகார் கூறப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள், சர்வதேச மனிதநேய சட்ட மீறல்கள் மற்றும் அவை தொடர்பானவற்றை விசாரிக்க விசேட சட்டவுரைஞருடன் கூடிய நீதித்துறை பொறிமுறை ஒன்றை உருவாக்குகின்ற இலங்கை அரசின் முன்மொழிவு கவனத்தில் கொள்ளப்பட்டு பாராட்டப்படுகிறது. சுதந்திரமான நீதி மற்றும் வழக்கு தொடுனர் அமைப்புகளை கொண்டதான நம்பகமான நீதி செயற்பாடுகள் நேர்மையும், பாரபட்சமின்மையும் கொண்டவர்கள் என அறியப்பட்ட மனிதர்களால் வழி நடத்தப்பட வேண்டும் என உறுதிக்கூறப்படுகின்றது. பொதுநலவாய மற்றும் ஏனைய வெளிநாட்டு நீதிபதிகளை கொண்ட விசேட சட்டவுரைஞர் அலுவலகம், பிரதிவாதிகளின் வழக்கறிஞர்கள், அதிகாரமளிக்கப்பட்ட வழக்கு தொடுனர்கள் மற்றும் விசாரணையாளர்கள் ஆகியவை/ஆகியோர், இலங்கை நீதித்துறை பொறிமுறைக்குள்ளே பங்குபற்றுவதன் முக்கியத்துவம் மேலும் உறுதிக்கூறப்படுகின்றது.

7. இலங்கை அரசாங்கமானது தனது உள்நாட்டுச் சட்டத்தை சீர்செய்வதன் மூலம் தனது சொந்தப் உத்தரவாதங்களை வினைத்திறமையுடன் நடை முறைப்படுத்துவதற்கும், கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கும்,தீர்மானம் 25/1 இல் கோரப்பட்டுள்ளபடி, ஐநா மனிதவுரிமை ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள சிபார்சுகளையும், சர்வதேச கடப்பாடுகளுக்கு இசைவானவொரு முறையில் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் ஆராயப்பட்ட காலப்பகுதியையும் உள்ளடக்கிய, சர்வதேச மனிதாபிமான சட்டத்தின்பொதுக்கோட்பாடுகளின் கீழ் உலக நாடுகளினால் கண்டறியப்பட்ட மீறுகைகள், மனித உரிமை துஷ்பிரயோகங்கள், சர்வதேச மனிதவுரிமை சட்ட மீறல்கள் ஆகியவற்றுக்கு பொறுப்பாக இருந்தவர்களுக்கான விசாரணைகளுக்கும், தண்டணைகளுக்கும் ஊக்குவிப்பு வழங்கப்படுகின்றது.

8. இராணுவத்தினர்களின் மதிப்பமையும் தொழில்சார் திறமையையும் அதிகரிப்பதற்கு உதவுகின்ற இடைமாற்ற நீதி நடைமுறையின் பகுதியாக வினை பயனுள்ள முறையில் பாதுகாப்புத்துறை சீர்த்திருத்தங்களை அறிமுகப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்திற்கு ஊக்கமளிக்கப்படுகின்றதுடன். இது மனித உரிமை மீறல்களை அல்லது துஷ்பிரயோகங்களை அல்லது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் மீறுகைகளை செய்தல் தொடர்பிலான பாரதூரமான குற்றங்களில் ஈடுபட்டுள்ள எவரையும் பாதுகாப்புப் படையில் வைத்திராமலிருப்பதை அல்லது ஆட்சேர்க்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

9. இலங்கை அரசாங்கமானது சமீபத்தில் நிறைவேற்றி, இற்றைவரையாக்கப்பட்ட சாட்சிகள், பாதிக்கப்பட்டவர்கள், பாதுகாப்புச் சட்டத்தையும் சட்டத்தை மீளாய்வு செய்வதற்கான அதன் பொறுப்பையும் வரவேற்கின்றதுடன் சாட்சிகளையும் பாதிக்கப்பட்டவர்களையும் விசாரணையார்களையும் வழக்குத் தொடருநர்களையும் நீதிபதிகளையும் பயனுள்ள முறையில் பாதுகாப்பதற்கு குறித்த வசதிகளை வழங்குவதற்கு இவை அத்தியவசியமான பாதுகாப்புக்களாகும்.

10. காணிகளையும் திருப்பி வழங்குவதற்கு எடுக்கப்பட்ட தொடக்க நடவடிக்கைகள் வரவேற்கப்படுகின்றன. அத்துடன் காணிகளை உரிய சிவில் சொந்தக்காரர்களுக்கு துரிதமாக வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு ஊக்குவிப்பு வழங்கப்படுகின்றது. மேலும் காணியின் உபயோகம் மற்றும் உடைமைப் பிரதேசங்களில் கையாள்வதற்கு பொறுப்பு எடுக்கப்படவேண்டிய முயற்சிகள் உள்ளன. குறிப்பாக சிவில் நடவடிக்கைகளில் இராணுவ ஈடுபாட்டை முடிவுறுத்த வேண்டியுள்ளது. சிவில் மக்களின் வாழ்க்கையில் அவர்களுடைய சீவனோபாயங்களை மீட்டெடுத்தல், வழக்கமான நிலைமைக்கு கொண்டு வருதல், மற்றும் இந்த முயற்சிகளில் சிவில் சமூகத்தினதும் சிறுபான்மை மக்களினதும் பிரதிநிதிகளையும உள்ளடக்கி அவர்களுடைய முழுமையான பங்குபற்றுதலில் முக்கியத்துவத்தை வலியுறுத்திக்கூறுதல். (புதியமொழி + k. c. M 25/1)

11. பத்திரிகையாளர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள், சிறுபான்மை தொகுதி சமய அங்கத்தவர்கள் மற்றும் சிவில் சமூகத்தின் ஏனைய உறுப்பினர்கள் மற்றும் வழிபாட்டுதலங்கள் மீது தனிப்பட்டவர்களினாலும் தொகுதியினர்களினாலும் மேற் கொள்ளப்பட்டதாகச் செய்யப்பட்டுள்ள. குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தாக்குதல்களைப் பற்றி விசாரணை செய்யுமாறு எதிர்காலத்தில் அத்தகைய தாக்குதல்களை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இலங்கை அரசாங்கத்தை ஊக்குவித்தல்.

12. பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை மீளாய்வு செய்வதற்கான இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு வரவேற்கப்படுகின்றது. அத்துடன் பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்து அதற்கு பதிலீடாக, சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டவாக்கத்தை உருவாக்குதல்.

13. வலுக்கட்டாய காணாமல் போதலிலிருந்து சகல நபர்களையும் பாதுகாப்பதற்கானசர்வதேச சமவாயத்தில்தாமதமின்றிகைச்சாத்திட்டு அதை வலுவாக்குவது,வலுக்கட்டாயமானகாணாமல் போகச்செய்தல்களை குற்றவியற்படுத்துவது, தற்காலிக நிவாரணமாக காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு "இல்லாதோர் சான்றிதழ்கள்" வழங்குவது, ஆகியவை தொடர்பில் அரசாங்கத்தின் பொறுப்பேற்பு வரவேற்கப்படுகின்றது.

14.முன்னைய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைகளை வெளியிடுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பேற்பு வரவேற்கப்படுகின்றது.

15. அரச நிறுவனங்களினால் அல்லது தனியார் நிறுவனங்களினால் நடாத்தப்பட்டிருந்த அனைத்து மனித உரிமைக மீறல்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறுகைகள் தொடர்பிலான சகல பதிவேடுகளையும், ஆவணமிடல்களையும் பேணி வைத்திருப்பதற்கான வலுவான திட்டமொன்றையும், பொறிமுறையையும் உருவாக்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு ஊக்கமளித்தல்.

16. தேவையான அரசியலமைப்பு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் அரசியல் தீர்வொன்றை மேற்கொள்வதற்கான அரசாங்கத்தின் பொறுப்பேற்பு வரவேற்கப்படுகின்றதுடன், நல்லிணக்கத்தின் ஓர் பகுதியாகவுள்ள அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்துக்கொள்ளுதல் மற்றும் இலங்கை மக்கள் சகலரினாலும் மனித உரிமைகள் முழுமையாக அனுபவிக்கப்படுவதற்குமான இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்களை பூர்த்தி செய்வதற்கு அது மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஊக்குவிப்பு வழங்கப்படுகின்றது. அத்துடன் இலங்கை அரசாங்கமானது சகல மாகாண சபைகளும் இலங்கை அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தத்திற்கு அமைவாக வினைபயனுள்ள முறையில் செயற்படுவதை இயலுமாக்குவதை உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்திற்கு ஊக்கமளிக்கப்படுகின்றது. (k.c.M 25/1- புதிய மொழி)

17. சித்திரவதை, கற்பழிப்பு, பால்வன்செயல் ஆகியவற்றையும் உள்ளடக்கி சருவதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சருவதேச மனிதாபிமானச் சட்டம் ஆகியவற்றை மீறுகை செய்தல் தடைசெய்யப்பட்டுள்ளன எனவும் அவற்றிற்கு பொறுப்பாகவுள்ளவர்கள் பற்றி விசாரணை செய்யப்பட்டு தண்டனை வழங்கப்படுமென பாதுகாப்புப்படைகளின் சகல கிளைகளுக்கும் தெளிவாக அறிவுரை வழங்குவதற்கான அரசாங்கத்தின் பொறுப்பேற்பு வரவேற்கப்படுகின்றதுடன் பால் மற்றும் பால் அடிப்படையிலான வன்செயல் மற்றும் சித்திரவதை பற்றிய சகல அறிக்கைகளையும் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளுமாறு அரசாங்கத்திற்கு ஊக்கம் வழங்கப்படுகின்றது.

18. உயர் ஆணையாளரின் அலுவலகத்திற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகத்தின் சிபாரிசுகளின் நடைமுறைப்படுத்தலினதும் இயைபுள்ள நடைமுறைகளையும் தொடர்ந்து மதிப்பீடு செய்யுமாறு நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பிலான சிபாரிசுகளையும் மனித உரிமைகள் மன்றத்தின் முப்பத்திரண்டாவது அமர்வில் வாய்மொழி மூலமான இற்றை வரைக்குமான இவ்விடயங்கள் பற்றிய வேலையையும் செய்யுமாறும் முப்பத்தி நான்காவது அமர்வில் தற்போதைய அமர்வின் நடைமுறைப்படுத்தல் மீதான கலந்துரையாடலைத் தொடர்ந்து அகல் விரிவான அறிக்கையை மதிப்பீடு செய்யுமாறும் கோரப்படுகின்றது.

19. பூர்த்தியடையாமலுள்ள கோரிக்கைகளுக்கு விதிமுறையாக அனுசரணை வழங்குதலையும் உள்ளடக்கி விசேட நடைமுறை பொறுப்பாணை வைத்திருப்பவர்களுடன் ஒத்துழைக்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு ஊக்குவிப்பு வழங்கப்படுகின்றது. (புதிய மொழி k.c.M 25/1-)

20. இலங்கை அரசாங்கத்தின் உடன்பாட்டுடன், உயர் ஆணையாளரின் விசேட அலுவலகத்துக்கும், இது தொடர்பில் நடைமுறைப் பொறுப்பாணை வைத்திருப்பவர்களுக்கும், மேற்குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஊக்குவிப்பு வழங்கப்படுகிறது. (k.c.M. 25/1)

**சுழியோடி**


# விளையாட்டு

## சிறந்த விமானப்படை விளையாட்டு வீரர்களுக்கான கௌரவிப்பு!

2022ஆம் ஆண்டின் சிறந்த விமானப்படையின் விளையாட்டு வீரர்களுக்கான கௌரவிப்பு வைபவம் கடந்த ஜனவரி 25ஆம் திகதி இலங்கை விமானப் படை தலைமையகத்தில் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது நடைபெற்றுவரும் 12ஆவது பாதுகாப்பு சேவைகள், விளையாட்டு போட்டிகள், தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு சம்பியன்ஷிப் போட்டிகளில் சிறப்பாக செயற்பட்ட விமானப்படை விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்கு பாராட்டுகளும் வெற்றிக் கிண்ணங்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

சர்வதேச போட்டிகளில் இலங்கை விமானப்படை கராத்தே அணியினர் 6ஆவது தெற்காசிய கராத்தே சம்பியன்ஷிப் 2022இல் பங்கேற்று, வெண்கலப் பதக்கத்தை பெற்று நாட்டுக்கு பெருமை சேர்த்தமையும் விசேட அம்சமாகும்.



## மகளிர் இருபது 20 உலகக் கிண்ணத்தில் பெண் மத்தியஸ்தர்கள்

தென் ஆபிரிக்காவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐசிசி மகளிர் இருபது 20 உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் முழுவதும் பெண்களை கொண்ட மத்தியஸ்தர்கள் கடமையாற்றவுள்ளதுடன், இலங்கையர் இருவருக்கும் தமிழகத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச மகளிர் கிரிக்கெட் போட்டி வரலாற்றில் பெண்கள் மாத்திரம் மத்தியஸ்தர்களாக செயற்படவிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

மிச்செல்பெரெய்ராபொதுமத்தியஸ்தராகவும்நிமாலிபெரேராகளமத்தியஸ்தராகவும்நியமிக்கப்பட்டுள்ளமை இலங்கைக்கு பெருமை சேர்ப்பதாக அமைகிறது.

அதேவேளை, தமிழகத்தின் சென்னையை சேர்ந்த நாராயணன் ஜனனியும் கள மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் முதலாவது பெண் பொது மத்தியஸ்தராக 2019இல் நியமிக்கப்பட்ட இந்தியாவின் ஆந்திர பிரதேசத்தைச் சேர்ந்த காந்திகோட சர்வ லக்ஷ்மி, 19 வயதுக்குட்பட்ட மகளிர் இருபது உலகக் கிண்ண கிரிக்கெட்டிலும் பொது மத்தியஸ்தராக கடமையாற்றவுள்ளார்.

மகளிர் இருபது 20 உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கடமையாற்ற 3 பொது மத்தியஸ்தர்களும் 10 கள மத்தியஸ்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் பேரவை அன்று வெள்ளிக்கிழமை (27) அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ஐசிசி பொது முகாமையாளர் வசிம் கான்.

"மகளிர் இருபது 20 உலகக் கிண்ண சுற்றுப் போட்டிக்கு முழுமையாக பெண்களைக் கொண்ட மத்தியஸ்த குழாத்தை அறிவிப்பதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம்" என்றார்.

மத்தியஸ்தர்கள் விபரம்

பொது மத்தியஸ்தர்கள்: ஜீ.எஸ். லக்ஷ்மி (இந்தியா), ஷண்ட்ரே ஃப்ரிஸ் (தென் ஆபிரிக்கா), மிச்செல் பெரெய்ரா (இலங்கை).

கள மத்தியஸ்தர்கள்: சூ ரெட்ஃபேர்ன் (இங்கிலாந்து), எலொய்ஸ் ஷெரிடான் (அவுஸ்திரேலியா), க்ளயார் போலோசக் (அவுஸ்திரேலியா), ஜெக்குலின் வில்லியம்ஸ் (மேற்கிந்தியத் தீவுகள்), கிம் கொட்டன் (நியு ஸிலாந்து), லோரென் ஏஜென்பேர்க் (தென் ஆபிரிக்கா), அனா ஹெரிஸ் (இங்கிலாந்து), விரிண்டா ரத்தி (இந்தியா), என். ஜனனி (இந்தியா), நிமாலி பெரேரா (இலங்கை)



## சானியா மிர்சா டென்னிசில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவிப்பு!

கிராண்ட்சிலாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்னில் நடந்து வருகிறது. இதில் இந்தியாவின் சானியா மிர்சா-போபண்ணா ஜோடி பிரேசிலின் லூசா ஸ்டெபானி-ரபெல் மேட்டோஸ் ஜோடியுடன் மோதியது. இதில் சானியா மிர்சா-போபண்ணா ஜோடி 6-7 (2-7), 2-6 என்ற நேர் செட் கணக்கில் தோல்வி அடைந்தது.

பிரேசில் ஜோடி சம்பியன் பட்டத்தை வென்றது. சானியா மிர்சா, அடுத்த மாதத்துடன் டென்னிசில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். அவர் தனது கடைசி கிராண்ட்சிலாம் போட்டியில் சம்பியன் பட்டம் வெல்வார் என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தோல்வி அடைந்து ஏமாற்றம் அளித்தார்.

தோல்விக்கு பிறகு சானியா மிர்சா கூறும் போது, எனது டென்னிஸ் வாழ்க்கை மெல்போர்னில் தொடங்கியது. எனது கிராண்ட்சிலாம் வாழ்க்கையை முடிக்க இதை விட ஒரு சிறந்த அரங்கை என்னால் நினைக்க முடியவில்லை என்றார். அப்போது சானியா மிர்சா உணர்ச்சி வசத்தில் கண் கலங்கினார்.



## ஐசிசி ஒருநாள் விருதுகள்!

ஐசிசி ஒருநாள் ஆட்டத்தில் ஆண்டின் சிறந்த வீரராக பாகிஸ்தான் கேப்டன் பாபர் ஆஸமும், சிறந்த வீராங்கனையாக இங்கிலாந்து துணை தலைவர் நடாலி ஷிவரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். சிறந்த வீராங்கனையாக தேர்வு செய்யப்பட்டுள்ள நடாலி ஷிவர் கடந்த 2022 இல் மட்டும் 2 சதங்கள், 5 அரைசதங்களை விளாசி உள்ளார். லாரா வொல்வர்ட்டுக்கு பின் மொத்தம் 833 ஓட்டங்களை விளாசியுள்ளார். ஸ்ட்ரைக் ரேட் 91.43 ஆகும். ஆஸி. வீராங்கனைகள் அலிஸா ஹீலி, ரேச்சல் ஹெயின்ஸ் ஆகியோரை பின்னுக்கு தள்ளி இந்த விருதுக்கு தேர்வானார் நடாலி. கடந்த ஒருநாள் உலகக் கோப்பையில் ஆஸி.க்கு எதிரான இறுதியில் 148 ஓட்டங்களை விளாசினார் நடாலி.

பாபர் ஆஸமுக்கு இரட்டை விருது:

ஐசிசி ஆண்டின் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரராக பாபர் ஆஸம் தொடர்ந்து இரண்டாவது முறையாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். மேலும் ஐசிசி சிறந்த வீரருக்கான சர் கேரி ஃபீல்ட் சோபர்ஸ் விருதை பெற்றுள்ளார். கடந்த 2022 இல் மொத்தம் 2598 ஓட்டங்களை விளாசினார். சராசரி 54.12 ஆகும். அனைத்து விதமான கிரிக்கெட்டிலும் 2,000 ஓட்டங்களைக் கடந்த ஒரே வீரர் பாபர் ஆவார். 8 சதம், 17 அரைசதங்கள் இதில் அடங்கும். ஒருநாள் ஆட்டத்தில் மட்டும் 9 ஆட்டங்களில் 679 ஓட்டங்களை விளாசினார். டி20 உலகக் கிண்ண இறுதிக்கும் தனது அணியை அழைத்துச் சென்றார். 2022 ஐசிசி ஒருநாள் அணியின் தலைவராகவும் பாபர் தேர்வு செய்யப்பட்டார்.

பென் ஸ்டோக்ஸ் : சிறந்த டெஸ்ட் வீரர்

ஐசிசி ஆண்டின் சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரர் விருது இங்கிலாந்து தலைவர் பென் ஸ்டோக்ஸ்க்கு கிடைத்துள்ளது. தலைவராக நியமிக்கப்பட்ட பின் 10 டெஸ்ட்களில் 9 இல் வெற்றியை ஈட்டியுள்ளார். நியூஸி, தென்னாப்பிரிக்காவுடன் தொடர் வெற்றி, இந்தியாவுடன் ஒரே டெஸ்ட் வெற்றி, பாகிஸ்தானை 3 - 0 என ஒயிட்வாஷ் செய்தது இதில் அடங்கும். மேலும் 870 ஓட்டங்களை விளாசி, 26 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். ரிச்சர்ட் இல்லிங்வொர்த் (இங்கிலாந்து) சிறந்த நடுவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



# உலக வலம்

## மடகஸ்காரில் புயல், வெள்ளம் : பலி எண்ணிக்கை 16 ஆக உயர்ந்துள்ளது.

ஜனவரி 25, 2023 அன்று மடகாஸ்கரில் உள்ள அண்டனானரிவோவில் வெள்ளம் சூழ்ந்த பகுதியில் மக்கள் உள்ளனர். இடர் மற்றும் பேரிடர் முகாமைத்துவ அலுவலகம் வியாழக்கிழமை வெளியிட்ட அண்மைய அறிக்கையின்படி, வலுவான வெப்பமண்டலப் புயல் செனிசோவைத் தாக்கிய பின்னர் 19 பேரைக் காணவில்லை என்பதுடன் இறப்பு எண்ணிக்கை 16 ஆக உயர்ந்துள்ளது.





## பழனி கோவில் கும்பாபிஷேகம் 16 ஆண்டுகளுக்கு பின் நடைபெற்றது

பழனி தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயிலில் அன்று(27) காலை மலைக்கோயிலில் உள்ள தங்ககோபுரம், ராஜகோபுரத்தில் உள்ள கலசங்களுக்கு புனிதநீர் ஊற்றியும், ஹெலிகொப்டர் மூலம் மலர்கள் தூவியும் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

16 ஆண்டுகளுக்கு பிறகு கும்பாபிஷேகம் நடைபெறுவதை முன்னிட்டு பழனியில் இலட்சக்கணக்கில் பக்தர்கள் குவிந்ததால் நகரமே விழாக்கோலம் பூண்டது.

முருக்கப்பெருமானின் மூன்றாம்படை வீடான திண்டுக்கல் மாவட்டம் பழனியிலுள்ள மலைக்கோயிலில் முருகன் தண்டாயுதபாணியாக வீற்றிருந்து மக்களுக்கு காட்சியளிக்கிறார். ஞானப்பழம் குறித்து எழுந்த சர்ச்சையில் பெற்றோரிடம் கோபித்துக்கொண்டு முருகக் கடவுள் வந்து குடியேறிய இடம் என சிறப்பு பெற்றது பழனி மலை.

பழனி மலையில் உள்ள தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் கடந்த 16 ஆண்டுகளுக்கு முன்பு (2006) கும்பாபிஷேகம் நடைபெற்றது.

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம்நடைபெறவேண்டும்என்றநிலையில்பல முறை கும்பாபிஷேகம் நடத்த முயற்சித்தும் 2018ஆம் ஆண்டு நடைபெறவேண்டிய கும்பாபிஷேகம் பல்வேறு காரணங்களால் தள்ளிப்போய்க் கொண்டே இருந்த நிலையில், கடந்த ஓராண்டுக்கு மேலாக கும்பாபிஷேகம் பணிகள் நடைபெறத் தொடங்கி கடந்தவாரம் முடிவுற்றது. இதையடுத்து அன்று(27) கும்பாபிஷேகம் நடைபெற்றது.

பல்வேறு காரணங்களால் நாட்கள் தள்ளிப்போய்க் கொண்டிருந்த பழனி மலைக்கோயில் கும்பாபிஷேகம் 16 ஆண்டுகளுக்கு பிறகு சிறப்பாக நடைபெற்றதால் தரிசனம் செய்ய வந்த பக்தர்கள் பெருமகிழ்ச்சியடைந்தனர்.



## கூகுளில் இருந்து 12,000 பணியாளர்கள் பணி நீக்கம்

கூகுள் நிறுவனம் தனது 12000 பணியாளர்களை பணியிலிருந்து நீக்குவதாக அறிவித்துள்ளது. கூகுளின் பணியாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள ஆவணமொன்றில் சுந்தர் பிச்சை இதனை தெரிவித்துள்ளார்.

அவர் அதில் தெரிவித்துள்ளது. நான் உங்களுடன் ஒரு கடினமான விடயத்தை பற்றி பேச வேண்டியுள்ளது நாங்கள் எங்கள் பணியாளர்களில் 12000 பேரை வேலையிலிருந்து நீக்குவதற்கு தீர்மானித்துள்ளோம். அமெரிக்காவில் பாதிக்கப்பட்ட எங்களின் பணியாளர்களிற்கு நாங்கள் ஏற்கனவே கடிதங்களை அனுப்பியுள்ளோம். ஏனைய நாடுகளில் இந்த செயற்பாடு உள்ளூர் சட்டங்கள் நடைமுறைகளை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்படும். இதன் அர்த்தம் என்னவென்றால் நாங்கள் பணிக்கு அமர்த்துவதற்காக கஸ்டப்பட்ட - நான் அவர்களுடன் பணியாற்றுவதை விரும்பிய மிகவும் திறமையான பலருக்கு பிரியாவிடை அளிக்கவேண்டிய நேரம் வந்துள்ளது என்பதே இதன் அர்த்தம்.

கூகுளில் பணிபுரிபவர்களின் வாழ்கையில் இந்த மாற்றங்கள் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற விடயம் என்னை பாதித்துள்ளது. இந்த தீர்மானத்தை எடுக்கவேண்டிய சூழ்நிலை உருவானமைக்கான முழுப்பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

கடந்த இரண்டு வருடங்களில் நாங்கள் மிகப்பெரும் வளர்ச்சியை பார்த்துள்ளோம். அந்த வளர்ச்சிக்கு தகுந்த விதத்திலும் தொடர்ந்து வளர்ச்சியடைவதற்கும் நாங்கள் வேறு விதமான பொருளாதார யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டோம். அதனை இன்று நாங்கள் எதிர்கொண்டுள்ளோம். எங்கள் நோக்கத்தின் வலுகாரணமாகவும் எங்கள் உற்பத்திகளின் பெறுமதி செயற்கை நுண்ணறிவில் எங்களின் முன்னைய முதலீடுகள் காரணமாகவும் எங்கள் முன்னால் உள்ள பாரிய சந்தர்ப்பங்கள் குறித்து நான் நம்பிக்கையுடன் உள்ளேன். இந்த வாய்ப்பை முழுமையாக பயன்படுத்துவதற்காக நாங்கள் சில கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது. எனவே ஒரு நிறுவனமாக எங்களின் உயர்ந்த முன்னுரிமைகளுடன் எங்கள் மக்கள் மற்றும் பணி சீரமைக்கப்படுவதை உறுதி செய்ய தயாரிப்பு பகுதிகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து முழுமையான மீளாய்வை மேற்கொண்டோம்.

இந்த மதிப்பாய்வின் அடிப்படையில் சில பணிகளில் இருந்து நீக்கங்களை நாங்கள் மேற்கொள்கின்றோம். எங்களை விட்டு விலகிச்செல்லும் கூகுள் பணியாளர்களிற்கு உலகின் முழுவதும் மக்களிற்கும் வர்த்தகத்திற்கும் உதவுவதற்காக கடுமையாக பணியாற்றியமைக்காக நன்றி உங்களின் பங்களிப்புகள் ஈடுஇணையற்றவை நாங்கள் அவற்றை மிகவும பெரிய விடயமாக கருதுகின்றோம். இந்த மாற்றம் இலகுவாக காணப்படாது. பணியிலிருந்து நீக்கப்படுபவர்களிற்கு புதிய வேலை கிடைக்கும் வரை நாங்கள் அவர்களிற்கு உதவுவோம்.

ஆகக்குறைந்தது 60 நாட்களிற்கு நாங்கள் அவர்களிற்கு ஊதியம் வழங்குவோம். பணியிலிருந்து நீக்கப்படும் பணியாளர்களிற்கான ஊதியங்கள் மற்றும் அனுகூலமான விடயங்களை நாங்கள் அவர்களிற்கு வழங்குவோம். 2022 மேலதிக கொடுப்பனவையும் மீதமுள்ள விடுமுறை நேரத்தையும் வழங்குவோம். பாதிக்கப்பட்டவர்களிற்கு ஆறுமாத சுகாதார நலன்கள் வேலைவாய்ப்பு சேவைகள் மற்றும் குடியேற்ற ஆதரவை வழங்குவோம். அமெரிக்காவிற்கு வெளியே குறிப்பிட்ட நாடுகளின் சட்டங்கள் மற்றும் நடைமுறைகளிற்கு ஏற்ப நாங்கள் உதவுவோம்.




## ஜெருசலேமில் யூதவழிபாட்டுதலத்தில் துப்பாக்கி பிரயோகம்

கிழக்கு ஜெருசலேமில் யூத வழிபாட்டுத்தலமொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிதாக்குதலில் ஏழுபேர் கொல்லப்பட்டுள்ளனர். நெவே யகோவ் நகரில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது. தாக்குதலை மேற்கொண்டவர் பயங்கரவாதி என தெரிவித்துள்ள பொலிஸார் அவரை செயல் இழக்க செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். கிழக்கு ஜெருசலேமை சேர்ந்த பாலஸ்தீனியரே இந்த தாக்குதலை மேற்கொண்டார் என உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. சம்பவம் இடம்பெற்ற இடத்தில் கருத்து தெரிவித்துள்ள பொலிஸ் அதிகாரியொருவர் கடந்த சில வருடங்களில் நாங்கள் எதிர்கொண்ட மோசமான தாக்குதல் இதுவென குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு ஜெருசலேமில் உள்ள யூதகுடியேற்றவாசிகள் யூதவழிபாட்டுத்தலத்தில் வழிபாடுகளை முடித்து விட்டு வெளியேறும் தருணத்தில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது. தாக்குதலை மேற்கொண்டவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். தாக்குதலை மேற்கொண்டவர் பயன்படுத்தியதாக தெரிவிக்கப்படும் வெள்ளை காரை அதிகாரிகள் தடயவியல் பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். பாலஸ்தீன விடுதலை இயக்கங்கள் இந்த தாக்குதலை வரவேற்றுள்ளன. எனினும் உரிமை கோரவில்லை. மேற்கு கரையிலும் காஜா பள்ளத்தாக்கிலும் பாலஸ்தீனியர்கள் இந்த தாக்குதலை வரவேற்றுள்ளனர்.



# திருகோணமலையில் சுட்டுக் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 17வது ஆண்டு நினைவு தினம்

திருகோணமலையில் சுட்டுக் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 17வது ஆண்டு நினைவு தினம் அன்று (24) மட்டக்களப்பு காந்திப் பூங்காவில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவு தூபியில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு ஊடக அமையம் மற்றும் கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் என்பனவற்றின் இணை ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட இந்நிகழ்வு சிரேஸ்ட ஊடகவியலாளர் பேரின்பராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், மாநகரசபை உறுப்பினர்களான சிவம் பாக்கியநாதன், க.இராஜேந்திரன், சிவில் செயற்பாட்டாளர் அருட்தந்தை கே.ஜெகதாஸன், மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஸ்ணகுமார், கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எல்.தேவதிரன் உட்பட ஊடகவியலாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிகள், சிவில் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது அமரர் சுகிர்தராஜனின் திருவுருவப் படத்திற்கு சிரேஸ்ட ஊடகவியலாளர் மற்றும் அருட்தந்தை ஆகியோரால் மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன், வருகை தந்தோர் அனைவராலும் மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டு, அஞ்சலியுரைகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 29.01.2023 அன்று வெளியிடப்பட்டது.